Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபால் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ கார்த்திகை 27 ஆம் நாள் றஜபு 3 (1?-12-61) செவ்வாய்க்கிழமை இதழ் 258

வாசனை உலகில் ஓர் பரப்புர!
33
இன்பம் தரும் 303 பத்திகளை
3003
உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்–2 மதுரை

# நாடுமுழுதும் இ.போ.ச. வேலைநிறுத்தம்!

## பொதுமக்கள் அவதி:

### வான்சாரதி தாக்கப்பட்டார்

### தனிப்பட்ட வான்களுக்கும் கார்களுக்கும் சுக்கிரதிசை

கொழும்பு

**யாழ்ப்பாணம் உட்பட நாடு முழுதுமுள்ள இ. போ. ச. ஊழியர்கள் நேற்று வேலை நிறுத்தத்திலிறங்கியதால் பொதுமக்கள் மிகுந்த கஷ்டத்துக்குள்ளானார்கள். நெருக்கடியைச் சமாளிக்குமுகமாக அரசாங்கம் புதிய புகையிரதப் போக்குவரத்துகளுக்கு ஏற்பாடு செய்தது. இதனால் தனிப்பட்ட வான்களுக்கும் கார்களுக்கும் நல்ல வருவாய் கிடைத்தது.**

நேற்று பிரயாணிகளை ஏற்றிச் சென்ற வான் சாரதி ஒருவரை ஹோமகமவில் உள்ள இ. போ. ச. சாரதி ஒருவர் தாக்கி, அவரிடமிருந்து 128 ரூபாவை பறிமுதல் செய்ததாயும், இது பற்றி பொலிசார் விசாரணை நடத்திவருவதாயும் அறிவிக்கப்பட்டது.

பொதுத் தராதரப் பரீட்சையில் கலந்துகொள்ளவிருந்த மாணவர்கள் குறிக்கப்பட்ட இடத்திற்குப் போக முடியாமல் மிகவும் கஷ்டத்துக்குள்ளாகினர். வாடகைக்கார்களுக்கு இதனால் பெரும் கிராக்கி ஏற்பட்டது.

வேலை நிறுத்தத்துக்குமுன் பேச்சுவார்த்தை நடத்துவது பற்றித் தெரிவிக்கவில்லை என்றும், பொது மக்களை மிகவும் கஷ்டத்துக்குள்ளாகியபின் கோரிக்கை விடுப்பதை ஏற்க முடியாதென்றும் இ. போ. ச. தலைவர் அறிவித்தார்.

மக்களுக்குப் பெரும் கஷ்டம் ஏற்பட்டிருப்பதாயும், இ. போ. ச. ஊழியர்களுக்கு தற்போதுள்ள சம்பள உயர்வையும், சலுகைகளையும் பாழாக்காமல் வேலைக்குத் திரும்புமாறும் தொழில், தேசிய சேவைகள் மந்திரி திரு. எம்.பி டி. இஸட் சிறிவர்த்தன வேலை நிறுத்தம் செய்யும் ஊழியர்களைக் கேட்டுக்கொண்டார்.

### யாழ்ப்பாணத்தில் வேலை நிறுத்தம்

வடபகுதியிலும் இ போ ச ஊழியர் நேற்று பிற்பகல் திடீரென வேலை நிறுத்தம் செய்தனர். எதுவிதமுன்னறிவித்தலுமின்றி ஆரம்பிக்கப்பட்ட இந்த வேலை நிறுத்தத்தினால் பிரயாணிகள் மிகுந்த கஷ்டத்துக்குள்ளானார்கள். இதனால் யாழ்ப்பாணம் பஸ் நிலையம் நடமாட்டமெதுவுமின்றி வெளிச்சென்று காணப்பட்டது.

இந்த வேலை நிறுத்தம் அகில இலங்கை பஸ் தொழிலாளர் யூனியனின் 22 கோரிக்கைகளுக்கும் அரசாங்கம் இணக்கம் தெரிவிக்கும்வரை தொடர்ந்து நடைபெறுமென வட இலங்கை பஸ் தொழிலாளர் யூனியனைச் சேர்ந்த சில பிரமுகர்களில்ஒருவர் தெரிவித்தார்.

### சகல டிப்போக்களும் வேலை நிறுத்தம்

சகல இ .போ .ச.டிப்போக்களிலுள்ள ஊழியர்களும் வேலை நிறுத்தம் செய்துள்ளதாக தமக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதென இ போ ச தலைவர் திரு ஆர் டி சில்வா இன்று தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள டிப்போக்களில் கடமையாற்றும் ஊழியர்களின் வேலை நிறுத்தம்பற்றி தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. அவர்கள் வேலை செய்கிறார்களென நினைக்கின்றேன்.

### 42 டிப்போக்களும் வேலை நிறுத்தம்

தகராறிலுள்ள பிரச்சினைகள் பற்றி ஆலோசிக்க ஒரு மகாநாடு கூடுமாறு 4 இ போ ச யூனியன்கள் கோரியுள்ளதுடன், 4 புதிய கோரிக்கைகளையும் அவை விடுத்துள்ளன.

இதுவரை 42 டிப்போக்கள் வேலை நிறுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன. கொழும்பில் ஒரு டிப்போவிலாவது வேலை நடைபெறவில்லை வீதியில் பஸ் நடமாட்டம் இருக்கவில்லை. தனிப்பட்டவர்களின் வான்சேவை சகல பாதைகளிலும் நடைபெறுகின்றது.

(8-ம் பக்கம் பார்க்க)

## பர்மிட் இல்லாத வான்களை அரசாங்கம் பொறுப்பேற்கும்

### இ. போ. ச. சேவை இல்லாத பாதைகளுக்கு மட்டும் சலுகை

கொழும்பு, திங்கள்

**இ. போ. ச. பஸ்கள் ஓடும் பாதைகளில், பர்மிட்டுகள் இல்லாமல் செல்லும் தனிப்பட்ட பிரயாணிகளை ஏற்றும் வான்களை அரசாங்கம் பொறுப்பேற்கும். ஆனால், இ. போ. ச. பஸ்சேவையில்லாத பாதைகளில் செல்லும் வான்களுக்கு இ. போ. ச. பர்மிட்டுகள் வழங்கும்.**

இது சம்பந்தமாக தேசியமயசேவை அமைச்சைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில், இ. போ. ச. பஸசேவையில்லாத பாதைகளில் ஓடும் வான்கள், சபையினால் விதிக்கப்பட்ட கட்டணங்களை மீறியும் அதிகப்படியான பிரயாணிகளை ஏற்றியும் அதிக கட்டணமும் வசூலிக்குமானால் இந்த வான்களையும் அரசாங்கம் பொறுப்பேற்கும் என்று கூறினர்.

## 3வது கிரிக்கெட் டெஸ்ட்

புதுடில்லி, டிச. 11

வருகிற புதன்கிழமை புதுடில்லியில் இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்குமிடையே கிரிக்கெட் டெஸட் போட்டி ஆரம்பமாகும்.

## இன்று பார்லிமெண்ட் கூடுகிறது

கொழும்பு, திங்கள்

ஜனப்பிரதிநிதிகள்சபை நாளை பிற்பகல் இரண்டுமணிக்கு கூடுகிறது.நாளைய கூட்டத்தொடரில் பரிசீலிப்பதற்காக 59 அம்சங்கள் இடம்பெற்றுள்ளன. அரசியலமைபபுச் சட்டத்தைத் திருத்தியமைப்பதற்காக அமைக்கப்படும் கூட்டு செயல் கமிட்டியில் 13 அங்கத்தவர்களுக்குப்பதில் 15 அங்கத்தவர்கள் இடம்பெறவேண்டுமென்ற தீர்மானம் முதல் நிகழ்ச்சியாக இடம் பெறும்.

ஜனப்பிரதிநிதிகள் சபையின் கடைசிக் கூட்டத்தில், தடைசெய்யப்பட்ட தமிழரசுக் கட்சி எம். பி க்களால் அவசரகால நிலைமை அகற்றப்படவேண்டும் என்று வாதிக்கப்பட்ட பிரேரணை அட்டவணையில் இடம்பெறவில்லை.

## கதிரியக்க துகள்கள் பற்றி நேரு

புதுடில்லி, டிச. 10

சமீபத்தில் நடைபெற்றஅணு ஆயுத சோதனைகளின் விளைவாக ஏற்பட்ட கதிரியக்கத் துகள்கள், வானத்தில் குறைந்தது ஓராண்டோ அல்லது அதற்கு மேற்பட்ட காலமோ இருக்குமேன்று மக்கள் சபையில் பிரதம மந்திரி நேரு கூறினர்.

அதன்பிறகு அந்தக் கதிரியக்க துகள்கள் பூமியின்மீது இறங்குமென்றும் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் தெரிவித்தார்.

சில்வித கதிரியக்க துகள்கள் வானத்தில் அநேக ஆண்டுகள் இருக்குமென்றும் அவர் சொன்னர்.

## 'ஐ. நா. நோக்கம் நிறைவேறும் வரை சண்டைநிறுத்தமில்லை'

### கடாங்காபற்றி யுதாண்ட் அறிவிப்பு

நியூயோர்க், டிச. 11

"கடாங்காவில் ஐ. நா. வின் நோக்கம் நிறைவேறும் வரையில் அங்கு அது சண்டையை நிறுத்தாது" என தலைமைக் காரியதரிசி யு தாண்ட் அறிவித்திருக்கிறர்.

ஐ. நா. ஊழியர்கள் தாக்கப்படமாட்டார்கள் என்பதும் சட்டம் ஒழுங்கு நிலைபெறும் என்பதும் தெரியும் வரை சண்டை நீடிக்கும் என்றார் அவர்.

கடாங்காவில் ஐ நா. வுக்கும் கடாங்கா துருப்புகளுக்குமிடையே இன்று தொடர்ந்து சண்டை நடைபெற்றது. இரு தரப்பினரும் தங்கள் கையே மேலோங்கியிருப்பதாய்த் தெரிவிக்கின்றனர். கடாங்கா விமானம் ஒன்று எலிஸபெத்விலி விமான நிலையத்தை தாக்கியதாய் அறிவிக்கப்படுகிறது.

ஐ. நா. விமானங்களுக்கு பிரிட்டன் சப்ளை செய்த 24 குண்டுகள் இதுவரை பாவிக்கப்படவில்லை எனக் கூறப்பட்டது. பிரிட்டிஷ் பிரதமர் திரு. மாக்மிலன் இன்று விசேஷ மந்திரி சபைக் கூட்டம்ஒன்றை நடத்தினர்.

பாரிசில் கூடியுள்ள அமெரிக்க, பிரிட்டிஷ், பிரெஞ்சு வெளிநாட்டு மந்திரிகளுக்கு பெல்ஜியம் வெளிநாட்டுமந்திரி திரு. ஹென்றிஸ்பாக் அனுப்பியுள்ள செய்தியில் கடாங்காவில் யுத்த நிறுத்தத்தைக் கோரும்படி கூறியுள்ளார்.

## மர்மக்கல் வீச்சு

ரூகம, திங்கள்

கடந்த சில தினங்களாக பட்டுவத்த புகையிரத நிலயத்துக்கருகிலுள்ள அநேக வீடுகளில், இரவு வேளைகளில் கல்வீச்சு சம்பவம் நடைபெற்று வருவதாகத் தெரியவருகிறது. இக்கல்வீச்சு சம்பவம், இரவு எட்டு மணிக்கு ஆரம்பமாகி அடுத்த நாட் காலை வரை தொடர்ந்து நடைபெறுகிறது.

இக்கல்வீச்சுக்கான காரணம் இதுவரை எவராலும் கண்டு பிடிக்கப்படவில்லை.

## ககாரின் இன்று இலங்கையை விட்டுப் புறப்படுகிறார்

### 5 நாள் விஜயம் பூர்த்தி

கொழும்பு, திங்கள்

**சோவியத் வானவெளி வீரர் ககாரினும், அவரது மனைவியும் நாளைக் காலை இலங்கையை விட்டுப் புறப்படுகிறார்கள்.**

ககாரின் தம்பதிகள் இன்று காலை தெகிவளை மிருகக் காட்சி சாலைக்குச் சென்று அங்கு யானைகளின் விளையாட்டுக்களைக் கண்டு களித்தனர். அவர்களுடன் சோவியத் ஸ்தானிகரும் சென்றிருந்தார். அங்குள்ள காட்சிகளை ககாரின் வர்ணப்படம் பிடித்தார் காலையில் அவர் கல்கிசைக் கடலில் நீந்திக்களித்தார். இன்று மாலை கால்பேஸ் ஹோட்டலில் அவர் நிருபர் மகாநாடு ஒன்றையும் நடத்தினர்.

## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணானந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## புற்று நோய்

ஆயுள்வேத முறையில் "யோகீஸ்வர ரசம்" புற்று நோயை வேரோடு அறுக்கும் என்பதை செயல் முறையில் நிலை நாட்டியுள்ளோம். இந்நோயால் பீடிக்கப்பட்டோர் எம்மை உடனே கலந்து ஆலோசிக்கவும். இந்நோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்த ஒருவர் அளித்துள்ள சான்றிதழ்:-

"எனக்கு வலது பக்க சொக்கினுள் புற்றுநோய் கண்டு பலரிடமும் காட்டி மாருமல் எட்டு மாதங்களால் திரு. செல்லையா வைத்தியரிடம் 40 நாள் மருந்தில் பூரண சுகமடைந்து மூன்று (3) வருடங்கள் பார்த்துத்தான் வெளியிடுகின்றேன். சி. திரேசியா, 10-ம் வட்டாரம், அல்லைப்பிட்டி." இப்படியாக அநேகர் நற்சான்றிதழ்கள் வழங்கியுள்ளனர். நேரில் கலந்து ஆலோசிக்குக.

பொ. செல்லையா, ஆயுள்வேத வைத்திய புற்று நோய் நிபுணர், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.


## 19 வயது யுவர் கிணற்றில் மூழ்கி மரணம்

மாவிட்டபுரம், திங்கள்

உடுவில் டச்சு ரோட் வாசியான மூத்ததம்பி வேலுப்பிள்ளையின் மகன் சத்தியவடிவேலுவின் மரணம் குறித்து வலி வடக்கு மரணவிசாரணை அதிகாரி திரு. பிறின்ஸ் இராசேந்திரா விசாரணை நடத்தினார். சுன்னாகம் பொலிசைச் சேர்ந்த கன்ஸ்டபிள் திரு. கந்தையா சாட்சிகளை ஆஜர் செய்தார்.

காலம் சென்றவரின் தந்தையான மூத்ததம்பி வேலுப்பிள்ளை சாட்சியமளிக்கையில் கூறியதாவது: "காலம் சென்றவர் எனது மகன். அவருக்கு வயது 19. வயல் வேலையால் வரும்பொழுது வழியில் உள்ள கிணற்றில் குளிப்பது வழக்கம். சம்பவம் நடைபெற்ற தினத்தன்று தானும் மகனும் மற்றும் சிலரும் கிணற்றில் இறங்கிக் குளித்தோம். தான் அழுக்கு தேய்க்க மேலே வந்தபின் திரும்பிக் கீழே குளிக்க வந்தபோது மகனைக் காணவில்லை. சுமார் ஐந்து நிமிடங்கள் காணாது அவரைத் தேடினேன். அவர் காணப்படாமையால் அழுதேன். அச்சத்தம் கேட்டு சுன்னாகம் தபால்கந்தோரின் தபால் சேவகனாகக் கடமையாற்றும் பொன்னர் தம்பிமுத்து கிணற்றில் இறங்கி மகனை வெளியில் எடுத்தார். அவருக்கு முதலுதவி அளிக்கப்பட்டபின் மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றோம். அங்குள்ளவர்கள் மகன் இறந்துவிட்டதாகத் தெரிவித்தார்கள்."

பொன்னர் தம்பிமுத்து, உடுவில் கிராம அதிகாரி, மானிப்பாய் அப்போதிகரி ஆகியோரின் சாட்சியம் பதிவு செய்யப்பட்டபின் கிணற்றில் மூழ்கியதால் தற்செயலாக மரணம் சம்பவித்தது எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

# மாவட்ட ஆஸ்பத்திரிகளில் ஊழல்கள்

## டாக்டர்கள் கடமையை செய்வதில்லையாம்!

கொழும்பு, திங்கள்

ஆஸ்பத்திரிகளில் கடமையாற்றுவதற்கென நியமிக்கப்பட்டுள்ள சுகாதார இலாகாவைச் சேர்ந்த டாக்டர்கள் பரிசோதனை நிலைய வேலைகளை செய்வதற்குப் பின் தங்கிவிடுகிறார்கள். ஒரு நோயாளியை இரத்த பரிசோதனைக்கு என அம்புலன்ஸ் மூலம் 52 மைல் தூரத்துக்கு அப்பால் ஒரு டாக்டர் அனுப்பி வைத்தாராம். இந்த டாக்டர் இரத்தப் பரிசோதனையைத் தாமே ஆஸ்பத்திரியில் செய்திருக்கலாம்.

ஆராய்ச்சி நிலையத்திலுள்ள பரிசோதனை வேலைகளை டாக்டர்கள் செய்யத் தவறுவது இப்போது மாவட்ட ஆஸ்பத்திரிகளிலுள்ள ஊழல்களில் குறிப்பிடத்தக்கதொன்று என சுகாதாரப் பகுதிச் சுப்ரின்டன்மார் சுகாதார இலாகாவுக்கு அண்மையில் புகார் செய்துள்ளார்கள். வைத்திய ஆராய்ச்சி நிலைய வேலைகளைச் செய்வதற்கு டாக்டர்களுக்குப் போதிய அனுபவமிருந்தபோதும் தமக்கு போதியநேரமில்லை என்றுசாட்டுச் சொல்லி அவ் வேலைகளை அவர்கள் செய்வதில்லை.

நூற்றுக்கு மேற்பட்ட படுக்கைகளைக் கொண்ட ஆஸ்பத்திரிகளில் ஆராய்ச்சித்தொழில் வல்லுனர்களை நியமனம் செய்யுமாறு டாக்டர்கள் கேட்டுள்ளார்கள்.

மாவட்ட ஆஸ்பத்திரிகள் அனைத்துக்கும் ஆராய்ச்சி நிலைய சேவையாளர்களை நியமிப்பது இயலாத காரியம் என சுகாதார இலாகா கருதுகிறது. எனினும் சுகாதார இலாகா இவ்விஷயம்பற்றி ஆராய்ந்து வருவதாகத் தெரிகிறது. டாக்டர்களே ஆஸ்பத்திரிகளில் உள்ள பரிசோதனை நிலையங்களில் பரிசோதனைகளைச் செய்து வருவார்களானல் இந்தப் பிரச்சினையை இலகுவில் தீர்த்துவிடலாம் எனச் சுகாதாரப் பகுதி நம்புகிறது.

# புகையிரதப் பாதை நிர்மாணம்

## வெளிநாட்டிலிருந்து பலகை இறக்குமதி?

கொழும்பு, திங்கள்

புகையிரதப் பாதைகளுக்குத் தேவையான மரங்களில் ஒரு பகுதியையேனும் புகையிரதப் பகுதி இவ்வாண்டு வெளிநாடுகளிலிருந்தே இறக்குமதி செய்ய வேண்டும். வன இலாகாவில் மரத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள காரணத்தாலேயே புகையிரதப் பகுதி இவ்வாறு செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

சிமிந்தித் தொழிற்சாலையொன்றைப் புதிதாக நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ள அறுக்கலாம் பகுதிக்கும் புத்தளத்துக்குமிடையே புகையிரத பாதை போடும் வேலைகளை மரத்தட்டுப்பாடு பாதிக்கலாம் எனக் கருதப்படுகிறது. இத்திட்டத்தில் இவ்வாண்டில் செலவு செய்வதற்கென ரயில்வேப் பகுதி 3,000,000 ரூபாயை ஒதுக்கி வைத்துள்ளது.

பழுதடைந்த புகையிரதப் பாதைப் பலகைகளை நீக்கி புதிய பலகைகளை அமைப்பதற்கும், புதிய புகையிரதப் பாதைகளுக்குமென இவ்வாண்டு 375,000 பலகைகள் புகையிரதப் பகுதிக்குதேவைப் படுகின்றன. வன இலாகாவிடம் இதற்குப் போதிய மரமில்லை. இவ்வருடம் 250,000 மரப்பலகைகளை மட்டுமே வன இலாகாவினல் புகையிரதப் பகுதிக்கு வழங்க முடியும் எனத் தெரிகிறது.

புத்தளப் பாதையை நீடிப்பதற்கு மட்டும் 75,000 பலகைகள் தேவைப்படும் எனத் தெரிகிறது.

## இலங்கை மாணவர் தலைவராகத் தெரிவு

லண்டன், டிச. 11

ஒக்ஸ்போர்ட் யூனியன் நிர்வாகக் கமிட்டித் தலைவராக டைரோன் பெர்னண்டோ என்னும் இலங்கை மாணவர் தெரிவு செய்யப்பட்டிருக்கிறர்.

## தபால் சேவையை துரிதமாக்க ஏற்பாடு

கொழும்பு, திங்கள்

அடுத்த வருடத்தில் தபால் சேவையை மேலும் துரிதப்படுத்தி பொதுமக்களுக்கு கடிதங்களை சீக்கிரமாக விநியோகிப்பதற்கான நடவடிக்கையை தபால் இலாகா மேற்கொண்டுள்ளது.

இதற்காக பல தபால் தெரிவு செய்யும் நிலையங்களைப் பிரதான இடங்களில் நிறுவ தபால் இலாகா தீர்மானித்துள்ளது.

## சைக்கிள் திருட்டு 1 வருட கடுங்காவல்

மாவிட்டபுரம், திங்கள்

எஸ். விஜயசுந்தரம் என்பவருடைய ரூ. 275 பெறுமதியான சைக்கிளைத் திருடிய நாகக் கட்டுவனைச் சேர்ந்த ராமன் நாகமுத்து என்பவர் மேல் குற்றம் சாட்டி காங்கேசன்துறை பொலிசாரால் மல்லாகம் நீதிபதி திரு. வெள்ளி டி. தாமோதரம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கில் எதிரிக்கு ஒருவருடக் கடுழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.


**10,000,000 மக்களும் விரும்பி வாங்குவன!**
**இலங்கை முழுவதும் புகழ் பரப்புவன!**
**எவை?**

டொலர்

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD
ONE DOLLAR
DOLLAR BRAND

**பவுண் அடையாளம் உள்ள அலுமீனியப் பாத்திரங்களே! ஏன்?**

டொலர் அலுமினியம் மாற்று உயர்ந்தது சுத்தம் உள்ளது!

டொலர் அலுமினியம் அழகு அமைப்பு கண்கவர்ச்சி உள்ளது!!

டொலர் அலுமினியம் உறுதி உழைப்பு உத்தரவாதம் உள்ளது!!!

எல்லாவற்றிற்கும் மேல்

உங்கள் தாய்ப் பொன்னுட்டில் மாவிட்டபுரத்தில் நவீன முறையில் செய்யப்படுவது!

டொலர் பவுணை பார்த்து வாங்குங்கள் எங்கும் கிடைக்கும்

**டொலர் மாத்திரமே உத்தரவாதமானது!**

தயாரிக்குமிடம்:

**அலுமினிய இன்டஸ்றீஸ் லிமிட்**

மாவிட்டபுரம், யாழ்ப்பாணம்

J. D



வெளிவந்துவிட்டது!

**1962-ம் ஆண்டு மாணவர் தினக்குறிப்பு**

மாணவர்களுக்கெனப் பிரத்தியேகமாக பல விசேஷ அம்சங்களுடன் வெளியிட்டிருக்கிறேம்.

விலை சதம் 75 மாத்திரம்

**ஈழநாடு லிமிட்டெட்**

சிவன்கோவில் மேற்கு வீதி, யாழ்ப்பாணம்.



**மொனரு அன் ரோஸ் பப்படங்கள்**

நாவிற்கு ருசியுடன் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு தனிஉளுந்தில் சுகாதார முறைப்படி தயார் செய்யப்படுவது

MONARA PAPPADAM · TRADE MARK 1850

மொனரு அன் ரோஸ் பப்படங்கள்
மூவர்ண கலர் லேபிளுடன்
மயில் – ரோஸ் அடையாள மிட்டு

ROSE FLOWER BRAND BEST PAPPADAM · REGD. TRADE MARK No 18255 · A. M. BUHARI. 255, 5th CROSS ST. COLOMBO.

இலங்கையில் எல்லா இடங்களிலும் விற்பனையாகிறது.

தயாரிப்பவர்கள்

**ஏ. எம். புகாரி அன் கோ.**

99, நாலாம் குறுக்குத் தெரு, கொழும்பு.

# கோவா நிலைமை-இந்தியா என்ன நடவடிக்கைஎடுக்கும்?

## 15 தினங்களுக்குள் தெரியும் என்கிறார் திரு. சாஸ்திரி

புதுடில்லி, டிச. 11

"அடுத்த பத்து பதினைந்து நாட்களும் பாரதத்துக்கு மிக முக்கியமான தினங்களாகும், கோவா சம்பந்தமாக பாரதம் என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறதென்பதும் பாரதத்தின் கொள்கை என்னவென்பதும் இத்தினங்களுக்குள் தெளிவாகிவிடும்" என்று இந்திய உள்நாட்டு விவகார மந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி நேற்று ஒரு வைபவத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

கோவா சம்பந்தமாக அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தாலும் அதற்கு மக்களின் பூரண ஆதரவிருக்கும் என்பது உறுதி என்றும் திரு. லால்பகதூர் சாஸ்திரி தெரிவித்தார்.

சீன ஆக்கிரமிப்புபற்றி திரு. சாஸ்திரி குறிப்பிடுகையில் இந்திய பிரதேசத்தில் ஆக்கிரமிப்புச் செய்துள்ள பகுதிகளிலிருந்து சீனர்கள் வெளியேறுவிட்டால் பாரதத்தின் மேம்பாட்டு வேலைகளையெல்லாம் நிறுத்திவைத்துவிட்டு சகல சக்திகளையும் ஒன்று திரட்டி உறுதியுடன் நிலைமையைச் சமாளிப்போம் என்று கூறினர்.

### எதிர்க்கும் பிக்குகள்

#### கலாசார டைரக்டர் விளக்கம்

ஹொரணை, ஞாயிறு

"கிலாச்சுவான்தார்களாகவும் வியாபாரிகளாகவுமுள்ள பௌத்த பிக்குகள்தான் சாஸனக் கமிஷன் அறிக்கையை அமுல் நடத்துவதை எதிர்க்கிறார்கள்" என்று கலாசார விவகார டைரக்டர் திரு. எம். ஜே. பெரேரா சிறி சீவாலி ஞாயிறு பாடசாலை பரிசளிப்பு விழாவில் பேசுகையில் கூறினர்.

"சாசனக் கமிஷன் அறிக்கை அமுல் நடத்தப்பட்டால் பௌத்த பிக்குகளே இலங்கையில் இல்லாமல் போய் விடுவர் என்ற அச்சம் சிலர் மனதில் உள்ளது. சிங்கள மன்னர்கள் காலத்திலும் தீய முறையில் நடக்கும் பிக்குசங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர்" என்று திரு. பெரேரா கூறினர்.

### பிரதமரைச் சந்திக்க முடிவு

ராகம, திங்கள்

அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்தில் வெலிசரை கடற்படை தளம் மூடப்பட்டது. முன்னூற்றுக்கு அதிகமானோர் வேலையிழப்பார்கள்.

இவர்களுடைய சேவை பெப்ரவரி மாதத்துடன் தேவை இல்லையென்று அவர்களுக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

தங்களின் எதிர் காலம் பற்றி பிரதமரைச் சந்தித்துப் பேசுவதென்று இந்த ஊழியர்கள் தீர்மானித்துள்ளனர்.

வெலிசரையில் புதிதாக நிறுவப்படவிருக்கும் ஸ்தாபனத்தில் தங்களுக்கு வேலை கொடுக்குமாறு இந்த ஊழியர்கள் பிரதமரைக் கேட்டுக்கொள்வர்.

# ரஷ்ய-அல்பேனிய ராஜீய உறவு முறிந்தது

மாஸ்கோ, டிச. 11

சோவியத் யூனியனுக்கும் அல்பேனியாவுக்குமிடையிலிருந்து வந்த ராஜீய உறவு முறிந்துவிட்டது. இருநாட்டுக் கம்யூனிஸ்ட் கட்சியினருக்குமிடையில் ஏற்பட்ட கருத்துவேற்றுமை வலுப்பெற்றதால் இந்த ராஜீய உறவு முறிவடைந்தது. மாஸ்கோவிலுள்ள அல்பேனிய தூதரையும் இதர அதிகாரிகளையும் திருப்பி அழைத்துக்கொண்டு தூதர் காரியாலயத்தை மூடிவிடும்படி சோவியத் அரசாங்கம் அல்பேனியாவுக்கு அறிவித்தது. அதே சமயம் அல்பேனியாவின் தலைநகரான கிரானாவிலுள்ள தங்கள் தூதர் காரியாலயத்தை மூடிவிட்டு நாடு திரும்புமாறு சோவியத் தூதருக்கு சோவியத் அரசாங்கம் உத்தரவிட்டது.

ஸ்டாலினின் தனிநபர் வழிபாட்டு முறையை அல்பேனியா தொடர்ந்து கடைப்பிடித்து வருவதாக சோவியத் யூனியன் குற்றம்சாட்டியது.

நேசநாடான அல்பேனியாவுடன் பகைமையை வளர்த்து மோசமான சூழ்நிலையை உண்டாக்கிய பொறுப்பு சோவியத் பிரதமர் குருஷ்சேவை சாரும் என்று அல்பேனியா குற்றம் சாட்டியுள்ளது.

# இந்திய கிராமத்தில் மீண்டும் சுட்டனர்

## போர்ச்சுக்கல் சிப்பாய்களின் நடவடிக்கை

### எல்லைப் பொலிசார் திருப்பிச் சுட்டதும் ஓட்டம் பிடித்தனர்

புதுடில்லி, டிச. 11

கோவா பகுதியிலுள்ள போர்ச்சுக்கல் சிப்பாய்கள் மீண்டும் பாரத பிராந்தியத்துக்குள் புகுந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் பாரத எல்லைப் போலிசார் திருப்பிச் சுட்டதும் அவர்கள் ஓடிவிட்டதாகவும் கூறப்படுகிறது.

கோவாவில் எல்லைக் கிராமங்களிலுள்ள மக்கள் அங்கிருந்து அகற்றப்படுகிறார்கள். இவர்கள் பாரதப் பிரதேசத்துக்குள் தஞ்சம் புகாவண்ணமும் தடுக்கப்படுகிறார்கள்.

எல்லைக் கிராமங்களிலிருந்து மக்கள் வேறிடங்களுக்கு அகற்றப்படுகிறார்களென்பதை லிஸ்பனில் வெளியான போர்சுக்கீஸிய அரசாங்கத்தின் அறிக்கையும் கூறுகிறது. பாரதப் பிரதேசத்தை நோக்கி போர்ச்சுக்கீஸிய சிப்பாய்கள் சுட்டது உண்மைதானென்றும் இதற்கு இந்தியாவின்நடவடிக்கைதான் காரணமென்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

கோவாவில் ஒரு பயங்கரவாதிகள் இயக்க கூட்டத்தினர் ஆட்களையும் சொத்துக்களையும் தாக்கித் தொந்தரவு செய்து வருவதாகவும் இதற்கு இந்தியாதான் காரணமென்றும் பேர்ச்சுக்கல் அரசாங்கம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

பாரதப் பிரதேசத்தில் ரத்னகிரி ஜில்லாவில் போர்ச்சுக்கல் சிப்பாய்கள் மீண்டும் புகுந்து 350 தடவைகள் இயந்திரத் துப்பாக்கிளால் சுட்டனரென்றும் புதிய பாரத எல்லைப் பொலிசார் அங்கு சென்று திருப்பிச் சுட்ட பொழுது போர்ச்சுக்கல் சிப்பாய்கள் திரும்பி ஓடிவிட்டனரென்றும் அறிவிக்கப்படுகிறது. இத்துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு போர்ச்சுக்கீஸிய சிப்பாய் காயமடைந்தார். அக்கிராமத்தைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலும் சுரங்கத் தொழிலாளர்கள். போர்ச்சுக்கீஸிய சிப்பாய்களின் நடவடிக்கையால் அச்சம் கொண்ட அவர்கள் சுரங்கங்களில் வேலைக்குச் செல்லவில்லை.

டாமனுக்கு மேலும் புதிய படைகளை போர்ச்சுக்கல் அனுப்பியுள்ளதாக ஒரு செய்தி கூறுகிறது. டையூவிலும் புதிய படைகள் வந்திறங்கியிருப்பதாகவும் அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

மஜாலியிலிருந்து கோவா செல்லும் வழியில் கோவா தேசிய இயக்கத் தலைவர்களிருவர் கைது செய்யப்பட்டனர்.

### இந்திய துருப்புக்கள்

#### கோவா எல்லைக்கு விரைகின்றன

புதுடில்லி, டிச.11

கோவா இந்திய எல்லையில் சுமார் 150 மைல் நீளக் கரையோரப் பகுதிக்கு பாரதத் துருப்புக்களும் டாங்கிகளும் அனுப்பப்பட்டு வருகின்றன.

போர்ச்சுக்கீஸிய சிப்பாய்களின் ஆத்திர மூட்டும் நடவடிக்கையைத் தொடர்ந்து இனியும் போர்ச்சுக்கீஸிய சிப்பாய்கள் இந்திய எல்லைக்குள் பிரவேசிக்காமலும் இந்தியப் பிரதேசத்தை நோக்கிச் சுடாமலும் தடுப்பதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக்கூறப்படுகிறது

### முல்லைத்தீவுவாடிவீடு விஸ்தரிக்கப்படும்?

முள்ளியவளை, திங்கள்

முல்லைத்தீவு வாடி வீட்டுக் கட்டடம், விஸ்தரிக்கப்படவிருக்கிறது.

பறங்கிக் கிரார் காலத்தைச் சேர்ந்த பழைய கட்டடத்தின் ஒரு பகுதியில் இயங்கிக்கொண்டிருக்கும் இவ்வாடி வீட்டுக்கு நவீன வசதிகளுடன் கூடிய அறைகள் அமைப்பதெனவும், மற்றும் பல சீர்திருத்தங்கள் செய்வதெனவும், வவனியாக் கச்சேரியில் நடந்த ஒரு மகாநாட்டின் போது தீர்மானிக்கப்பட்டதாக தெரிகிறது.

### நெசவுசாலையிற் களவு

உடுப்பிட்டி, திங்கள்

கரவெட்டி மேற்கு நெசவுசாலையில் கடந்த வெள்ளி இரவு ரூபாய் 250 பெறுமதியான 41 சாரங்கள் திருடப்பட்டுள்ளதாகத்தெரிகிறது. உடுப்பிட்டிப் பகுதியில் நடந்த நெசவுசாலைத் திருட்டுகளில் இது மூன்றாவதாகும். பருத்தித்துறைப் பொலிசார் புலன் விசாரணை செய்துவருகின்றனர்.

# "போர்ச்சுக்கல் ஆதிக்கம் இனியும் நீடிக்கமுடியாது"

## பிரதமர் நேரு அறிவிப்பு

நங்கல் டிச. 11.

"பாரதத்தின் ஒரு பகுதியான கோவாவில் போர்ச்சுக்கீஸியரின் ஆதிக்கம் இனியும் நீடிக்க முடியாது" என்று பாரதப் பிரதர் ஸ்ரீநேரு நேற்று நங்கலில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர்.

கோவாவில் சென்ற பதினுன்கு வருடங்களாக போர்ச்சுக்கீஸியரின் அடக்குமுறை ஆட்சி நடைபெற்றுவந்தது. இதை பாரதம் பொறுமையுடன் பார்த்துக்கொண்டிருந்தது. சமாதான வழியையே இன்னமும் கடைப்பிடிக்க விரும்புகிறது. கோவா சம்பந்தமாக இனி என்ன நடக்குமென்று நான் சொல்லமாட்டேன் என்ன நடப்பதாக இருந்தாலும் அது போர்ச்சுக்கீஸியரின் நடவடிக்கையைப் பொறுத்திருக்கும்" என்று ஸ்ரீ நேரு அறிவித்தார்.

பாரதம் எதற்கும் தயாராக இருக்கிறது என்றும் ஸ்ரீ நேரு கூறினர்.

### இந்தியாவின் முக்கியத்துவம்

#### ஆர்ஜன்டினு அதிபர் கருத்து

பாங்காக், டிச. 11

"உலக சமாதானத்திலும் பாதுகாப்பிலும் பாரதத்துக்கு முக்கிய இடமுண்டு" என்று ஆர்ஜன்டினு அதிபர் டாக்டர் பிரண்டீஸி நேற்று இங்கு கூறினர்.

இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு பாங்காக் வந்துள்ள அதிபர் பிரண்டீஸி ஜனநாயக முறையில் முன்னேறிவரும் இந்தியாவின் முயற்சிகள் முக்கியத்துவம் வாய்ந்தவை யென்று கூறினர்.

### டாக்டர் கலீல் நம்பிக்கை

கொழும்பு, திங்கள்

"பெரும்பான்மை வகுப்பினரிலும் அரசாங்கத்திலும் எனக்கு இப்போதும் நம்பிக்கையுண்டு. நியாயமான முறையில் எமது கோரிக்கைகள் பிரதமர் முன்னிலையிலும் மந்திரி சபை முன்னரும் சமர்ப்பிக்கப்பட்டால் அவர்கள் அவற்றுக்கு தக்க நடவடிக்கைகள் எடுப்பார்கள்"

இவ்வாறு டாக்டர் எம். பி. எம். கலீல் மருதானை மகுதிக்கு அருகாமையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர். மருதானை பள்ளிவாசலின் சொத்துக்களை அரசாங்கத்திடம் ஒப்படைக்கும்படி கல்வி மந்திரி சட்டம் பிறப்பித்ததற்கு ஆட்சேபனை தெரிவிக்கும் முகமாக நடைபெற்ற இக்கூட்டத்தில் பேசுகையில் டாக்டர் கலீல் மேலும் கூறியதாவது:-

"முஸ்லிம் மக்களின் முறைப்பாடுகளை கவனிப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன். ஆனால் கல்வி மந்திரி ஜனுப் பதியுதீன் மாமூத் அதற்குத் தடையாக இருக்கிறார்."

கூட்டத்திற்குத் திரு. ஏ. சி. எம். அமீர் தலைமை தாங்கினர். திரு. அமீர் பேசுகையில் "கல்வி மந்திரி ஒரு 'குட்டி ஹிட்லராவர்' "என்று கூறினர்.

### கராச்சி பத்திரிகைக்கு கோவா கவர்னர் பேட்டி

புதுடில்லி, டிச. 11

கராச்சிப் பத்திரிகையொன்றுக்கு கோவா கவர்னர் ஜெனரல் அளித்துள்ள பேட்டியில் கோவாவில் 50 அல்லது 60பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

# "ஆடம்பரச் செலவை விடுத்து அபிவிருத்திக்கு உதவுக!"

## பிரதமர் சிறிமா வேண்டுகோள்

நுகேகொடை, திங்கள்

"நான் பல்வேறு வைபவங்களில் கலந்து கொள்ளச் சென்ற சமயம் சிலர் பந்தல்கள் அமைக்கவும் என்னை ஆடம்பரமாக வரவேற்கவும் ஆர்வம் காட்டினர். இதற்காகச் செலவிடும் பணத்தை நாட்டின் சமூக வேலைகளுக்கு நன்கொடையாக அளிக்கும்படி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்" என்று பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா கங்கொடைவில பெண்கள் விடுதியின் புதிய கட்டிடம் ஒன்றைத் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அனுவசியமான செலவுகளை மக்கள் குறைத்துக்கொண்டு நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதவவேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார்.

உள்நாட்டு விவகார மந்திரி திரு. மைத்திரிபாலசேனநாயக்கா பேசுகையில் சமூக சேவையில் ஈடுபடவேண்டுமென்ற ஆர்வம் சமீபத்தில் தான் பௌத்தர்களுக்கு ஏற்பட்டதென்றார்.

உற்சாகமுள்ள பொது மக்களின் உதவயின்றி எவ்வளவு பணமுள்ள அரசாங்கமும் சமூக சேவையை வெற்றிகரமாகச் செய்ய முடியாதென்று திரு. மைத்திரிபாலசேனநாயக்கா கூறினர்.

# மக்கள் பிரதிநிதிகள் ஆலோசனைபெருது நிர்வாக மொழியில் மாற்றஞ் செய்யவேண்டாம்

## மாநகரசபைக்கு வரவிருக்கும் பிரேரணை

யாழ்ப்பாணம், திங்கள்

வடக்கு கிழக்கு மாகாணங்களில் மக்களின் பிரதிநிதிகளின் ஆலோசனையைப் பெருது, நிர்வாக மொழியில் மாற்றஞ் செய்ய அரசாங்கம் உத்தேசித் திருப்பதையிட்டு வருத்தம் தெரிவித்தும், மொழிப் பிரச்சினைக்கு நிலையான தீர்ப்பொன்று காணும்வரை இத்தகைய மாற்றம் ஒன்றும் செய்யாதிருக்கும்படி அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்று எதிரேவரும் யாழ்ப்பாண மாநகரசபைக் கூட்டத்தில் கொண்டுவரப்படவிருக்கிறது.

இதற்கான முன்னறிவித்தலை திரு. பி. எஸ். சோமசுந்தரம் செய்துள்ளார்.

## மணி வாக்கு

துன்புறுவோருக்கு இரங்குக. அவர்களுக்கு இன்புறுவோர் செலுத்த வேண்டிய கடன் அதுவே.
—போப்


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு கார்த்திகை மீ27 உ (12-12-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## மீண்டும் வேலை நிறுத்தம்

இலங்கையில் மீண்டும்பஸ் வேலை நிறுத்தம் நடந்து பொது மக்களுக்கு மிகவும் சங்கடங்கள் ஏற்படுத்தி வருகின்றன. சில வாரங்களுக்கு முன்தான் ஒரு வேலை நிறுத்தமேற்பட்டு முடிந்தது. அதற்குள் மறுபடியும் இந்த வேலை நிறுத்தம் ஏற்பட்டுள்ளதைப் பார்க்கையில், ஏதோ பெரிய கோளாறு இருக்க வேண்டுமென்றுவிளங்குகின்றது.

இப்போதைய வேலை நிறுத்தத்துக்குக் காரணம், இருபத்தொரு குற்றங்களை இ. போ. ச. அதிகாரிகள் குறிப்பிட்டு, அக் குற்றத்தில் ஏதாவது ஒன்றைச் செய்தவர்களை வேலையிலிருந்து கட்டாயமாக நீக்க வேண்டுமென்று ஒரு சுற்றுத்தரவு பிறப்பித்ததென்பதே என்று கூறப்படுகிறது. மோசடி, கள்ளத்தனம், பணத்தை வசூலித்து டிக்கெட் கொடுக்காமலிருப்பது, பணத்தை நம்பிக்கை மோசம் செய்தல், வழக்கமாக குறைந்த வசூல், வேண்டுமென்றே சபையின் சொத்துக்களை நாசமாக்குதல்,பிரயாணிகளையும்பொது மக்களையும் வேண்டுமென்றே திட்டி, தாக்குவது, கீழ்ப்படியாமை, பிரயாணிகளை ஏற்றிக் கொள்ளாமல் செல்லுவது, கவலையீனமாக ஓட்டுவது, மதுபானம் அருந்தி, பஸ்ஸை ஓட்டுவது, லஞ்சம் வாங்குவது அல்லது கொடுப்பது உள்ளிட்டு அந்த 21 குற்றங்கள் செய்பவர்களையும் வேலை நீக்கம் செய்யவேண்டுமென்ற உத்தரவு புதிதல்லவென்றும், ஏற்கெனவே அமுலிலுள்ளதையே, சுற்றுத்தரவாக அனுப்பியுள்ளதாயும், பொதுஜன நன்மை கருதி அதை வாபஸ் வாங்க முடியாதென்றும், இ. போ. ச. அதிகாரி தெரிவிக்கின்றார்.

இந்த உத்தரவு காரணமாக அற்ப குற்றத்துக்கும் சிப்பந்திகள் வேலை நீக்கம் செய்யப்படுவதாயும், ஆகவே, இந்த உத்தரவை வாபஸ்வாங்குவதுடன், நான்கு பெரிய யூனியன்களுடன் ஒழுக்குமுறை விதிகளைப்பற்றி ஆலோசனை செய்ய வேண்டுமென்றும் மற்குறித்த உத்தரவின்படி, நேர்மையற்ற முறையில் அளிக்கப்பட்ட தண்டனைபற்றி புனராலோசனை செய்ய வேண்டுமென்று யூனியன்கள் கேட்டுள்ளன. சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் அற்பமானவையென்றோ, மன்னிக்கத்தக்கவையென்றோ, யூனியன்களும் கூறமுடியாது. தனிப்பட்ட கம்பெனி நிர்வாகத்தார் இவ்வித குற்றம்செய்பவர்களை உடனடியாக வேலை நீக்கம் செய்யவும் கூடும். ஆனால் இ. போ. ச. பொது மக்களின் வசதியை கவனிப்பதுடன் கருணையுள்ள எஜமானாகவும் இருக்க வேண்டும். பெரிய மோசடி குற்றங்களுக்கு வேலை நீக்கத் தண்டனைவிதிக்க வேண்டியதுதான். ஆனால் மற்ற குறைந்தகுற்றங்களுக்கு, முதன் முறையாக அபராதம், எச்சரிக்கை முதலிய தண்டனை விதித்து, பிறகும் திருந்தாவிடில், வேலை நீக்கம்செய்யலாம். எப்படியும் இவ்விஷயமாக யூனியன் பிரதிநிதிகளுடன் கலந்து பேசி, ஒழுங்கு விதிகளை தயாரிப்பது, இவற்றை சீராக அமுல் நடத்த உதவும்.

தங்கள் குறைகளைத் தீர்த்துக்கொள்ள இ. போ. ச. சிப்பந்திகளுக்கு வேலை நிறுத்தம் செய்யும் உரிமை உண்டுதான். ஆனால் பஸ் வேலை நிறுத்தத்தால் பொது மக்களுக்கு அதிக சங்கடம் ஏற்படுவதால், அந்த பிரம்மாஸ்திரத்தை கடைசி ஆயுதமாகவே கைக்கொள்ள வேண்டும். தங்கள் குறைகளை முதலில் மேலதிகாரிகளுக்கும், மந்திரிக்கும், பிறகு பிரதமருக்கும் எடுத்துக்கூறி, அதுவும் பயனில்லாது போனால், கடைசியாக வேலை நிறுத்தம் செய்து தங்கள் குறைகளை நீக்கிக் கொள்ள முற்படலாம். அத்தியாவசிய சேவைகளில் ஈடுபட்ட அச்சிப்பந்திகள், அடிக்கடி, இவ்வித வேலை நிறுத்தத்தை முதல் நடவடிக்கையாகக்கொள்ளுவதால், பொது மக்களின் அபிமானத்தை இழக்க நேரிடுவதுடன்,பொது மககளின் நன்மையைவிட தங்கள் சுயநன்மையையே அவர்கள் பெரிதாக மதிப்பதாகக் கருதப்படலாம். இருதரப்பினரும் பொது நன்மையை முன்விட்டு, விட்டுக் கொடுதது. இத்தகராறைத் தீர்த்துக் கொள்ளுவதுடன், இனி இவ்விதம் நேரிடாமல் தக்க ஏற்பாட்டைச செய்வது அவசியம்.

# குழந்தைகளின் கற்பனைத்திறன்

## அதனை வளர்ப்பது எப்படி?

**குழந்தைகளின் கலைஆர்வத்தையும், கற்பனைத்திறனையும் வளர்ப்பது எப்படி? நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஓர் ஆசிரியரின் செயல்முறை இங்கு தரப்பட்டுள்ளது. இந் நாட்டு ஆசிரியர்களுக்கும் உபயோகமானதெனக் கருதுகிறோம்.**

நெதர்லாந்து நாட்டில் மெப்பெல் நகரில் மூர்ஹென் என்ற பெயரில் நிறுவப்பட்டுள்ள குழந்தைகள் பள்ளிக்கூடம் சிறுவர் சிறுமியரின் கற்பனைத் திறனை—கலை ஆற்றலை—உலகுக்கு அறிவிக்கும் நிலைக்களனைத் திகழ்கிறது. இத்துறையில் குழந்தைகளைப் பழக்கிய பெருமை குழந்தைகள் உலகில் குழந்தைகளோடு குழந்தையாய் வாழும் ஆசிரியை திருமதி ஸ்டீன் ஈல்சிங் அம்மையாரையே சாரும்.

இவர் ஓவியத்தில் கைதேர்ந்தவர். "குழந்தைகளால் எதுவும் செய்யமுடியும்" என்ற கருத்துக்கொண்டவர். குழந்தைகளின் திறமையில் அவருக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை உண்டு. "குழந்தைகளின் மனதில் என்னவெல்லாமோ தோன்றுகிறது. அதை அவர்கள் சுயேச்சையாய் வெளியிடும்படி விட்டுவிடவேண்டும்" என்ற கொள்கையில் தீவிரப் பற்றுக் கொண்டவர். மெப்பெல் பள்ளிக்கூடத்துச் சுவர்ச் சித்திரத்தைப் பார்த்தால், இவர் சொல்வது சரியென்பது புலனாகும். மெப்பெல் பள்ளிக்கூடம் கலைக்கூடமாகக் காட்சியளிக்கிறது.

### கலைக்கேந்திரம்

திருமதி ஈல்ஸிங் தமது பணனை வீட்டையே ஒரு கலைக் கேந்திரமாக மாற்றியிருக்கிறார். நெடுங்காலமாக இளைஞர் நலப் பணியில் ஈடுபட்டிருக்கும் இவருக்கு சமாளிக்கமுடியாத முரட்டுக் குழந்தைகளிடம் தனி அக்கறை உண்டு. "ஓவியம், சிற்பம் முதலிய கலைகளின் விளைவுகள் முக்கியமில்லை. குழந்தைகள் தம் மனதில் தோன்றுவதைக் கொஞ்சமும் கட்டுப்பாடில்லாமல் வெளியிடும்படி விட்டால் அதன்மூலம் தோன்றும் விளைவுகள் அதிக அழகுள்ளவை" என இவர் கூறுவார். குழந்தைகளின் மனதில் தோன்றக்கூடிய எண்ணங்களையெல்லாம் கற்பனை செய்து பார்க்கும்திறன் பெரியோருக்கு இருக்கவேண்டியது மிக முக்கியம்.

மெப்பெல் பள்ளிக்கூடத்திட்டத்தை ஆரம்பிக்கும்போதே திருமதி ஈல்ஸிங், குழந்தைகள் எதை எதை யெல்லாம் விரும்புகிறார்கள் என்பதை ஆராய்ந்து அறிந்தார் பளபளப்பான வர்ணப்பொருள் எதுவும் குழந்தைகளுக்குப் பிடிக்கும் என்பதைப் புரிந்துகொண்ட இவர் அதனைத் தமது திட்டத்தின் ஆதாரக் கருத்தாக வைத்துக் கொண்டார்.

டச்சுக் கம்பனி ஒன்றிலிருந்து உடைந்த மண் பாத்திரத் துண்டுகளை நிறைய வாங்கினார். அழுத்தமான வர்ணங்களில் காணும் கண்ணடித் துண்டுகளையும், மணிகளையும், முத்துக்களையும் வாங்கிச் சேகரித்தார்.

### நேரில் காட்டவேண்டும்

திருமதி ஈல்ஸிங் பறவைகளையும், புஷ்பங்களையும் சித்திரத்துக்குரிய விஷயமாக குழந்தைகளுக்கு சிபார்சு செய்தார். மலர்களையும், பறவைகளையும் கண்டு அர்வத்துடன் சித்திரம் வரைய ஆரம்பித்தார்கள். நவீனக் கல்விமுறையின் கருத்தைக் கண்டு மயங்காத குழந்தை எது? ஆகவே, "மூர்ஹான்" குழந்தைகள் ஒரே ஆர்வத்துடன் சித்திரம் வரைய ஆரம்பித்தார்கள் நவீனக் கல்விமுறையின் கருத்தை நன்கு அறிந்த திருமதி ஈல்ஸிங் "குழந்தைகள் வரைவதைத் தவறென்று கூறி நாம் போட்டுக்காட்ட முற்பட்டால் அவர்களது மனதில் சஞ்சலம் ஏற்படுமென்று அறிந்தவர் மேலும் தமக்கு ஒன்றுமே தெரியாது என்று குழந்தை நினைத்துக் கொண்டு, நாளடைவில் ஆசிரியரையே பார்த்து எழுத ஆரம்பித்துவிடும். பலன் அந்தக் குழந்தையின் சித்திரத்தில் சுயமான கற்பனை என்பதே இல்லாமற் போய்விடும்" என்பதை நன்குணர்ந்தவர். இதனால் குழந்தைகளுக்கு எந்தப் படத்தையும் பார்த்துப்போடும்படி போதிக்கக்கூடாது. அவர்களை மரங்களும், மலர்களும், பிராணிகளும் உள்ள இடங்களுக்கு அழைத்துச்சென்று நேரில் காட்ட வேண்டும். பிறகு அவர்கள் சுயமாகவே கற்பனைசெய்து அவற்றை வரைவார்கள். குழந்தைகள் வரையும் பறவை ஒன்று பார்ப்பதற்கு விநோதமாயிருக்கலாம். ஆனால் குழந்தைகளுடைய கற்பனையில் அது ஒரு பறவைதான். இதை நாம் மறக்காமலிரும்பது முக்கியம் என்று அவர் கூறுவார்.

### மாதிரிப் பரிசோதனை

ஆயத்தப் படங்கள் வரைந்தபின் குழந்தைகள் இந்தப் படங்களிலிருந்து உருவங்களை வெட்டியெடுத்து ஒருவருக்கொருவர் ஒப்பிட்டுப் பார்த்துக்கொண்டார்கள். தாம் இறுதியாக அமைக்கவேண்டிய வர்ண சித்திரத்தின் அமைப்பை அவர்களே இதன்மூலம் தீர்மானித்துக்கொள்ள முடிந்தது.

வர்ண சித்திரத்துக்குத் தேவையான பொருள்களையும் குழநதைகளே தேர்ந்துகொண்டார்கள். வர்ண சித்திரத்தின் அந்தந்தப் பகுதிகளில் உரிய துண்டுகளை வைத்து ஒட்டினார்கள். இந்தமாதிரி ஒவ்வொரு மூலை முடுக்கும் நிரப்பப்பட்டது. இறுதியில் வர்ணக் கண்ணடித் துண்டுகளிலிருந்தும், முத்துக்கள் மணிகள் முதலிய வற்றிலிருந்தும் ஓர் அற்புதமான வர்ண சித்திரம் உருவாயிற்று.

ஆசிரியரின் நோக்குடன் பார்க்கும்போது இந்தமாதிரிப் பரிசோதனை மிகவும் உபயோகமானது என்பது புலனாகும். இதன்மூலம் குழந்தைகளின் கற்பனைத்திறனும், தைரியமும் வளர்ச்சியடைகிறது. இதற்கு, குழந்தைகளிடையே கூட்டுறவு அவசியமாதலால், குழுவாகச் சேர்ந்து செயலாற்றும் பயிற்சி முழந்தைகளுக்கு ஏற்படுகிறது. தம்மால் ஒரு பொருளைப் படைக்க முடிகிறது என்ற உணர்வும், தாம் செய்துமுடித்த பொருளைத் தினமும் பார்ப்பதால் ஏற்படும் ஓர் இடைவிடாத திருப்தியும் குழந்தைகளுடைய தன்னம்பிக்கையை வளர்க்கிறது.

கூட்டு முயற்சியால் உருவாகியுள்ள இந்த வர்ண சித்திரம் குழந்தைகளுக்கு மட்டுமின்றிப் பெரியோருக்கும் மகிழ்ச்சியூட்டுகிறது. நூற்றுக்கணக்கான கண்ணடித் துண்டுகளையும் மணிகளையும் கொண்டு பள்ளிக்கூடத்து விளையாட்டறையில் 3 அடி அகலத்துக்கு பள்ளிக்கூடச் சுவரை வர்ணமயமாக்கியிருக்கிறார்கள்.

## 11,000 மனுக்கள்

கொழும்பு, திங்கள்

இலங்கை இராணுவத்திலே சாதாரண வீரர்வரிசையில் காலியாயிருந்த 150 ஸ்தானங்களுக்கு மனுச் செய்யுமாறு விளம்பரஞ் செய்யப்பட்ட போது 11,000 பேருக்குமேல் மனுச் செய்தனர். ஆறும் வகுப்பில் அரங்கேறியவர்களே இந்தப் பதவிக்குத் தகுதியுடையவர்களாயிருந்தும் அவர்களில்மூவாயிரம்பேர்வரைஎஸ். எஸ. சி. தராதரப் பத்திரம் உடையவர்கள். அதனல் இவர்கள் நீங்கலாக எஞ்சிய 8,000 பேரும் முதல் தெரிவிலேயே நீக்கப்பட்டு மூவாயிரம் பேருமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டனர். இவர்களிலும் உயரம், மார்பளவு ஆதியன குறைந்த காரணமாக 2,500 பேர் நீக்கப்பட்டனர். பின்னர் தேறிய 500 பேரிலும் 150 பேர் தெரிவு செய்யப்படலாயினர்.

## இலங்கை—இந்திய வர்த்தகம்

கொழும்பு, திங்கள்

வர்த்தக மந்திரி இந்திய அரசாங்கத்துடன் செய்துள்ள புதிய வர்த்தக உடன்படிக்கைப்படி, 1,500 தொன் றப்பரும், 15,000 தொன் கொப்பறும், 7,500 தொன் தேங்காய் எண்ணெயும் கூடுதலாக வாங்கவும், அதிகமான புகையிலையை இறக்குமதி செய்யவும் இந்திய அரசாங்கம் இணங்கியுள்ளது. ஐந்து இலட்சம் ரூபா வரை பெறுமதியான சிறந்த இனக் கைத்தறி நெசவு துணிகளை இறக்குமதி செய்ய இலங்கை வர்த்தக மந்திரி காரியாலயம் இசைந்துள்ளது.

## ஐயாறன் எழுதுவது

கொழும்பிலிருந்து ஓர் அன்பர எழுதுவதாவது:-

இந்தமுறை திருவெம்பாவை உற்சவம், கார்த்திகை மாதமே ஆரம்பமாகிறது. டிசம்பர் 14ந் திகதி வியாழக்கிழமை முதல் 23ந் திகதிவரை நடைபெறும் இந்தப் பத்துநாள் உற்சவத்திலும், திருவெம்பாவை பாடல்களை இலங்கை வானெலி பல வருடங்களாக அஞ்சல் செய்து நல்ல புகழ் ஈட்டியுள்ளது.

ஆனல் இம்முறை பணமில்லை என்ற சாக்குக்கூறி ஒரே ஒரு நாள் மட்டுமே அஞ்சல்செய்ய உத்தேசித்திருப்பதாயும் கேள்விப்பட்டேன். வானெலி இந்து சமய ஆலோசனை சபையினர் 10 நாளும் வழமைபோல் அஞ்சல் செய்யப்பட வேண்டுமென்று வற்புறுத்தி எழுதியிருப்பதாகத் தெரிகிறது.

அதிகாரிகள் இதை ஏற்று வழமைபோல் அஞ்சல் செய்வார்களா என்பது இனித்தான் தெரியவேண்டும். இந்தப் பத்து நாட்களுக்கும் ரூ. 150 தான் செலவாகும். இலங்கையிலே இரண்டாவது பெரிய சமயத்தவராகவுள்ள இந்துக்களுக்காக இந்தப் பணம் செலவிடுவது அதிகமாகுமா?

திரு. க. கனகரத்தினம், திரு. மு. சு. திருவிளங்கம் போன்றவர் இவ்விடத்தில் இல்லாததன் விளைவு ஒன்றாகத் தெரிகிறது. ஏதோ அவனருளால் நடப்பதைக் காண்போம்.

* * *

ஏற்கெனவே நல்லூர் உற்சவ அஞ்சல் பற்றியும் இதே மாதிரி ஒரு தகராறு ஏற்பட்டு முடிவில் வழமைபோல் அஞ்சல் செய்தனர். அதைப்போல் திருவெம்பாவை அஞ்சல் விஷயமாகவும் நடைபெற இறைவன் திருவருள் பாலிப்பானென்றே நம்புவோம்.

இதற்கிடையே கொழும்பு வெள்ளவத்தை மாணிக்க விநாயகர் கோவிலில் பத்து நாட்களுக்கும் பத்துப்பேர் பாட ஒழுங்கு செய்யப்பெற்றுள்ளது. ஐந்து ஆண்கள் ஐந்து பெண்கள். இந்த அஞ்சலை இலங்கையில் மட்டுமன்றி, இந்தியா, பர்மா, மலாயா முதலிய நாடுகளிலும் பல சைவ மக்கள் கேட்டு இன்புற்று இலங்கையைப் பாராட்டியிருக்கின்றனர். வேறு டப்பாப பாட்டுகளை இராப்பகலாகப் போட்டு செய்யும் பாவத்துக்கு இது ஓரளவு பிராயச்சித்தமுமாகும்.

* * *

கொழும்பில் மட்டுமன்றி ஆங்காங்கே எல்லா சிவாலயங்களிலும் திருவெம்பாவை உற்சவம் நடைபெற விசேஷ ஒழுங்குகள் செய்யப்பெற்றுள்ளன. அதிகாலை 3 மணிக்கு எழுந்து முழுகி பல ஊர்களிலும் பஜனை கோஷ்டிகள் தெருத்தெருவாகப் பாடிக் கொண்டு செல்வர். யாழ்ப்பாணத்திலும் பல கோஷ்டிகள் கிளம்ப ஏற்பாடாகியுள்ளதாகத் தெரிகிறது. திக்கற்றவருக்குத் தெய்வம்தானே துணை!

வண்ணை சிவன்கோவிலில் சிதம்பரத்தைப்போல் காலையிலும் மாலையிலும் திருவெம்பாவைப் பாடல்கள் பாடப்படுவதுடன், வாதவூர் அடிகள் புராணப் படனமும் மாலையில் நடைபெறுமென்றும் வித்வான் திரு. இரத்தினேஸ்வர ஐயர் விளக்கம் கூறுவாரென்றும் ஓர் அன்பர் தெரிவிக்கிறார்.

இந்தத் துணிகள் யார் ஒன்று இரண்டு ரூபாவுக்குமேல் விற்பனவாகும் இனத்தைச் சேர்ந்டன.

# போலிஸ் கோஷ்டியைத் தாக்கி

## காயப்படுத்தியதாக வழக்கு

### விசாரணை ஒத்திவைப்பு

மாவிட்டபுரம், திங்கள்

காங்கேசன்துறை சார்ஜன்ட் எஸ். இராசதுரையின் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியைத் தாக்கிக் காயம் உண்டுபண்ணியதாகவும் அக்கோஷ்டியினரை அவர்களது கடமையைச் செய்ய விடாது தடுத்ததாகவும் குற்றம் சாட்டி காங்கேசன் துறைப் பொலிசாரால் பலாலி தெற்கைச் சேர்ந்த கிட்ணன் கதிரவேலு, சின்னவன் ரத்தினம், சின்னப் பொடியன் கந்தையன், வேலன் ரத்தினம், வைரவன் கந்தன் ஆகிய ஐந்து நபர்கள் மேலும் மல்லாகம் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் காங்கேசன் துறை அரசினர் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் எஸ். இராஜசூரியரின் சாட்சியத்தை நீதிபதி பதிவு செய்தபின் வழக்கை 18-1-62க்கு ஒத்திவைத்தார்.

## சாராயவிற்பனைக் கடைகள்

கொழும்பு, திங்கள்

'கசிப்பு' என்ற கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கான மற்றோர் நடவடிக்கையாய்ச் சாராயத் தவறணைகள் இல்லாத பகுதிகளில் சாராயத் தவறணைகள் இல்லாத பகுதிகளில் சாராயம் விற்பதற்கொன்று விசேட கடைகளைத் திறக்கப் 'பர்மிட்' வழங்கும் யோசனையை உள்நாட்டு மந்திரி காரியாலயம் ஆதரிக்கின்றது. அரசாங்கமும் இதனை ஆதரிக்குமானல் சாராயத் தவறணைகளோ, பார்களோ இல்லாத பகுதிகளில் சாராயம் விற்கப் பர்மிட்டுகள் வழங்கப்பட்டுச் சாராய விற்பனைக் கடைகள் திறக்கப்படுமாம்.

## கடன் கிடைத்தது

வவனியா, திங்கள்

வவனியா பட்டினசபைக்கு மத்திய அரசாங்கம் 167620 ரூபா கடனை கொடுத்துள்ளது. வவனியாப் பட்டின சபையில் இயங்கி வரும் மின்சார இயந்திரம் அடிக்கடி பழுதடைந்து வருவதால் வவனியாப் பகுதியில் மின்சார ஓட்டம் தடைப்பட்டு விடுகிறது. இதுகாரணமாக் பட்டின சபையினர் அரசாங்கத்திடம் பலமுறை வற்புறுத்திய தன் விளைவாக மின்சார இயந்திரம் வாங்குவதற்காக அரசாங்கம் 167620 ரூபா கடனைவழங்கியுள்ளது. இதைக் கொண்டு இயந்திரங்களை வாங்கி மின்சார வினியோகத்தை பல இடங்களுக்கும் விஸ்தரிப்பதற்காக ஒழுங்குகள் நடைபெற்று வருகின்றது.

# கமிஷனர் சின்னையாவின் இக்கட்டான நிலை

## இடமாற்ற உத்தரவில் எழுந்துள்ள சிக்கல்

யாழ்ப்பாணம், செவ்வாய்

இம்மாதம் 4-ந் திகதி வெளியாகிய ஒரு ஆங்கிலப் பத்திரிகை பிரசுரித்திருந்ததுபோல், திரு. ஏ. வி. சின்னையா தற்சமயம் நீர்கொழும்பில் கடமையாற்றவில்லை. நீர்கொழும்புக்குச் செல்வதற்கு "ரயில்வே வாறண்ட்"டும்செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்களுக்கான சம்பளமும் வருமா என தினமும் காலையில் கடிதத்தை எதிர்பார்த்து மாநகரசபை கமிஷனர் திரு ஏ.வி.சின்னையா இப்பொழுதுயாழ்ப்பாணத்தில் தான் இருக்கின்றார்.

இவ்வருடம் ஜனவரி மாதம் திரு. சின்னையாவுக்கு இடமாற்ற உத்தரவு வந்திருந்தது. இதன்படி திரு. சின்னையா இவ்வருடம் ஏப்ரல் மாதம் முதல் திகதி நுவரேலியாவுக்கு மாற்றலாகிச் செல்லவிருந்தார். ஆனல் திரு. சின்னையா தமது இடமாற்றத்தை ஜூன் மாதம் முதல் திகதிக்கு ஒத்திவைக்கும்படி கோரியிருந்தார். அதன்படி இவரது மாற்றம் ஜூன் மாதம் முதல் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. திரு. சின்னையா யாழ்ப்பாண மாநகர சபையில் இவ்வருடம் டிசம்பர் மாதம் 31-ந் திகதிவரை கடமையாற்ற வேண்டும் என்ற தீர்மானம் மாநகர சபையில் ஏகமனதாக நிறைவேறியது. ஏப்ரல் மாதம் 17-ந் திகதி அவசரகாலநிலை பிரகடனப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, யாழ்ப்பாண மாநகரசபை மேயர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார். திரு. சின்னையாவுக்கு மீண்டும் நுவரெலியாயாவுக்கு இடமாற்ற உத்தரவு வந்தது. அதன்படி ஏப்ரல் மாதம் 26-ம் திகதி திரு. சின்னையா நுவரேலியாவில் கடமையாற்ற வேண்டும் என்று இருந்தது. 26-ம் திகதி தாம் நுவரெலியாவுக்கு மாறிச் செல்ல வேண்டும் என்று தமக்கு உத்தரவு வந்திருப்பதாக திரு. சின்னையா தொடர்பதிகாரிக்கு முறையிட்டதைத் தொடர்ந்து திரு. சின்னையாவின் இடமாற்ற உத்தரவு தள்ளி வைக்கப்பட்டது.

செப்டம்பர் மாதம் முதல் திகதியிலிருந்து காலியில் கடமையாற்றும்படி, திரு சின்னையாவுக்கு (ஆகஸ்ட் மாதம் முதல் திகதி) இடமாற்ற உத்தரவு வந்திருந்தது இதை ஆட்சேபித்து, தமக்கு 1962-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் திகதிவரை இடமாற்ற உத்தரவை தள்ளி வைக்கும்படி திரு. சின்னையா கேட்டுக்கொண்டதற்கிணங்க ஆகஸ்ட் மாதம் 19-ம் திகதிக்கு அவருடைய இடமாறற உத்வரவு தள்ளி வைக்கப்பட்டது.

செப்டம்பர் மாதம் 11-ம் திகதியிலிருந்து நீர்கொழும்பு மாநகரசபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக, ஆகஸ்ட் மாதம் 28-ம் திகதி திரு. சின்னையாவுக்கு அறிவிக்கப்கப்பட்டது.

1961-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் திகதியிலிருந்து திரு. சின்னையாவுககு இதுவரை ஐந்து இடமாற்ற உத்தரவுகள் வந்திருக்கின்றன. சுகவீனம் காரணமாக திரு. சின்னையா செப்டம்பர் மாதம் 4-ம் திகதியிலிருந்து வைத்திய லீவில் இருந்தார். இவருக்கு செப்டம்பர் மாதம் 10-ம் திகதி வரையானசம்பளத்தை யாழ்ப்பாண மாநகரசபை வழங்கியுள்ளது. ஆனல் அதற்குப்பின்னர், அதாவது செப்டம்பர் அல்லது அக்டோபர் அல்லது நவம்பர் மாதச் சம்பளம் திரு. சின்னையாவுக்கு வழங்கப்படவில்லை.

இதற்குப் பின்னர் தமது சம்பள நிலுவைகளையும் நீர்கொழும்புக்குச் செல்வதற்கான புகையிரத வாறண்டுகளையும் தமக்கு அனுப்பிவைக்கும்படி திரு. சின்னையா கோரியிருந்தார். எதுவும் இவர் கைக்குக் கிடைக்கவில்லை. இது சம்பந்தமாக நீர்கொழும்பு மேயருக்கு திரு. சின்னையா அறிவிக்கவே, செப்டம்பர் மாதம் 30-ம் திகதி வரை திரு டி. டி. டி. ஜயசிங்கியை மாநகரசபைக் கமிஷனராகக் கடமையாற்றும்படி ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனிடமிருந்து உத்தரவு வந்துள்ளதென்றும் அதனல் திரு. சின்னையாவை கமிஷனராக நியமிக்க முடியாதென்றும் நீர்கொழும்பு மேயர் பதிலளித்தார்தாா. இறுதியில்என்னசெய்வதென்று தெரியாத நிலையில் இருந்த சின்னையா, ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனுக்கு முறையிட்டுவிட்டு இம்மாதம் 5-ம் திகதி யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். இதைத் தொடர்ந்து திரு. சின்னையாவை வேலைக்குவரும்படியும் அவருக்குக் சேர்மதியான சம்பளம் வழங்கப்படுமென்றும் நீர்கொழும்பு மேயர் அறிவித்திருந்தார். நீர்கொழும்புக்குச் செல்வதற்காக புகையிரத வாறண்டையும் சம்பள நிலுவையையும் கோரி திரு. சின்னையா மனுப்பண்ணியிருந்தார். ஆனல் எதுவும் இவர் கைக்கு இதுவரை கிடைக்கவில்லை. இதனல் ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனின் உத்தரவுகளை இவர் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்.

இப்பொழுது திரு. சின்னையாவுக்கு ஏற்பட்டிருக்கும் பிரச்சினை என்னவெனில் செப்டம்பர் மாதம் 11-ம் திகதியிலிருந்து 30-ந் திகதி வரைக்கான சம்பளத்தை எங்கிருந்து பெறுவது என்பது தான். இந்தச் சம்பளத்தை யாழ்ப்பாணம் மாநகரசபை வழங்காது. காரணம் திரு. சின்னையா அந்த இடைவேளைக் காலத்தில் இங்கு இருக்கவில்லை. இதுபோல் நீர்கொளும்பு மாநகரசபையும் அவரது சம்பளத்தை வழங்காது.

செப்டம்பர் மாதம் 11-ம் திகதி நீர்கொழும்பில் கடமையாற்றிக் கொண்டிருந்த மாநகரசபை கமிஷனர் திரு. டி ஜெயசிங்காவுக்கு இடமாற்ற உத்தரவு பற்றி அறிவிக்காது, திரு. சின்னையாவை அங்கு அந்தத் திகதியில் இடமாற்றம் செய்ததற்கு பொறுப்பாளி யார் என்பது புரியாத புதிராக இருக்கிறது.

# வீடுகள்கொடுத்தாலும்

## சேரிகளில் வசிக்கவே விருப்பம்!

கொழும்பு, திங்கள்

கொழும்பு நகரத்திலுள்ள சட்டவிரோதமான சேரிக் குடிசைகளில் வசிப்பவர்களுக்கு நகரத்துக்கு அப்பால் வீடுகள் வளங்கப்பட்டுள்ளபோதும் அவர்கள் சேரிக்குடியிருப்பையே விரும்புகிறார்கள் எனத் தெரிகிறது. வெரஹெராவில் இவர்களுக்கு என அமைக்கப்பட்டுள்ள வீடுகளில் இப்போது 60 வீடுகள் காலியாகவிருக்கின்றனவாம். வெரஹெராவில் இவர்களுக்கென நகர அமைப்புத்திட்ட இலாகா அமைத்துள்ள 304 வீடுகளில் 244 வீடுகளில் மட்டுமே மக்கள் தங்கியிருக்கிறார்கள். எஞ்சிய 60 வீடுகளிலும் சென்று வசிக்குமாறு கேட்கப்பட்ட சேரிக் குடியிருப்பு மக்கள், அவ்வீடுகள் தமது வேலைத்தளத்திலிருந்து அதிக தூரத்தில் அமைந்துள்ளன எனவும் ஆகவே அவற்றில் சென்று வதியத் தாம் விரும்பவில்லை எனவும் இலாகாவுக்கு அறிவித்துள்ளார்களாம். தாம் இப்போது இருந்துவரும் பகுதிகளில் இலாகா பின்னர் விடமைத்துக் கொடுக்கத் தயாராகவிருந்தால் வெரஹெராவிலுள்ள வீடுகளில் தாம் சென்று தங்குவதாக அவர்கள் கூறியுள்ளார்கள். அரசாங்கம் இவர்களது கோரிக்கையின்படி செய்வதற்கு மறுப்புக் காட்டியுள்ளது.

## கென்னடி-மாக்மில்லன் சந்திப்பு

லண்டன், டிச. 11

இம்மாதக் கடைசியில் அமெரிக்க ஜனதிபதி கென்னடியைச் சந்திக்க பிரிட்டிஷ் பிரதமர் திரு. மாக்மில்லன் செல்லும் போது அவருடன் வெளிநாட்டு மந்திரி ஹியூம் பிரபுவும் செல்வார்.

## கொலை வழக்கு மீண்டும் ஒத்திவைப்பு

தெல்லிப்பழை, திங்கள்

வல்வெட்டித் துறையைச் சேர்ந்த தம்பையா சபாரத்தினம் என்பவரைச் சுட்டுக் கொலை செய்யப்பட்டது சம்பந்தமான விசாரணை மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது.

பருத்தித்துறை நீதிபதி திரு. ஏ. வைத்திலிங்கம் முன்னிலையில் வல்வெட்டித்துறை இராணுவ முகாமையைச் சேர்ந்த துப்பாக்கி வீரர் பெரரா காப்பரல் குணரத்தினவின் உத்தரவுப்படி டி. சபாரத்தினத்தைச் சுட்டுக் கொலை செய்தது சம்பந்தமாக நடைபெற்று வந்த விசாரணை அரசாங்க ரசாயனப் பகுதி அதிகாரியின் அறிக்கை வராமையால் இம்மாதம் 18-ந் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

# "வழ வழா பேச்சுக்கான காலம் மலையேறிவிட்டது"

## போர்ச்சுக்கல் போக்குபற்றி நேருஜீ மீண்டும் எச்சரிக்கை

புதுடில்லி, டிச. 11

கோவாசம்பந்தமாக எல்லா நெருக்கடி நிலைக்கும் இந்தியா தன்னைத் தயார் செய்து கொண்டு விட்டது எனப் பிரதமர் நேரு இன்று லோகசபையில் கூறினர். அடையாளமே தெரியாமல் நிலைமை திருந்தினலன்றி நமது உத்தேசத்தை நிறைவேற்றியே தீருவோம் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

"சகல ஆயத்தங்களும் எடுத்துக் கொண்டு விட்டோம். அங்கு மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளிலிருந்து அவர்களைப் பாதுகாக்க மறுப்பது சரியல்ல. கோவாவுக்கு ஒருவித சுயேச்சை அளிப்பதாக போர்ச்சுக்கல்இப்போது கூறுகிறது. இந்த வழவழாப் பேச்சுக்கெல்லாம் காலம் மலையேறிவிட்டது"என்றும் நேருஜி கூறினர்.

எல்லை நெருக்கடியில் சீனவையும், போர்த்துக்கலையும் பாகிஸ்தான் பத்திரிகைகள் தாக்கியிருப்பதுபற்றிக் குறிப்பிட்டு பாகிஸ்தானுக்கு எவ்வித நெறியும் கிடையாது என்றும் அவர் கூறினர்.

"கோவா விஷயமாக எவரிடமிருந்தும் முறைப்படியான ஒரு சமரச யோசனைவரவில்லை. கோவாவைவிட்டு வெளியேறுமாறு போர்த்துக்கலுக்குப் புத்திமதி கூறுவதைத் தவிர சமரசம் பற்றிப் பேசுபவர்களுக்கு வேறு வழியில்லை. எங்கள் பொறுமை தீர்ந்துபோய் விட்டது என்பதில் ஐயமில்லை கோவாவைவிட்டு போர்த்துக்கல் வெளியேறியே ஆகவேண்டும் என்ற இயற்கை முடிவை மாற்ற முடியாது. சட்டப்பிரச்சினைகளையும், இதர பிரச்சினைகளையும் பிறகு பேசிக்கொள்ளலாம். இப்போது அவர்கள் வெளியேறியே ஆக வேண்டும். எல்லைக்குள் வந்து தாக்குதல் உட்பட பல விஷயங்களில் போர்த்துக்கல் நினைத்தபடி நடக்க நாம் விட்டுவிடமாட்டோம்" என்றார் நேரு.

போர்த்துக்கல் கோவா சம்பந்தமாக ஐ. நா.வில் விநியோகிக்கும் கடிதத்திற்கு அவசியமானல் மறுப்புக் கடிதம் அனுப்பப்படும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

சீனவைப்பற்றி அவர் குறிப்பிடுகையில் இந்தியாபற்றி அங்கு நடைபெறும் பகைப்பிரசாரம் அந்நாட்டின் தொன்றுதொட்ட மரபு, மரியாதை, புராதன சரித்திரம், வரலாறு, பண்பாடு ஆகியவற்றுக்கு மாறான பேச்சும், செயலுமாய் இருக்கிறதென்றார்.

கடாங்காவில் ஐ. நா. நடவடிக்கையைஆதரித்துப்பேசிய அவர், கடாங்கா பிரிவினையை ஒழித்து ஐக்கிய காங்கோவை நிறுவவேண்டுமெனக் கூறினர்.

## தபால் கந்தோரில் போன் வசதி இல்லை!

ஹிண்டகல, திங்கள்

சுமார் இரண்டு வருடகாலத்திற்கு முன்னர் ஆரம்பமான தென்னக்கும்புர உபதபால் கந்தோரில் இன்றுவரை நந்தி அல்லது டெலிபோன் வசதிகள் இல்லாமல் இருப்பது பெரும் குறையாக இருந்து வருகிறது. சுமார் 200 யார் தூரத்துக்கப்பாலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் டெலிபோன் இருக்கிறது. ஆனல் தங்களது தேவையின்போது இந்த டெலிபோன் வசதி பயன்படுவதில்லை என்று பொது மக்கள் முறையிட்டுள்ளனர். சனநெருக்கடியுள்ள தென்னக்கும்புராவில், ஒரு உபதபால் கந்தோர் இப்படியான நிலையில் இருப்பது வருந்தத்தக்க தொன்றாகும் என்று அங்கு வசிப்பவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

## கிறிஸ்தவ கூட்டம்

யாழ்ப்பாணம், திங்கள்

கிறிஸ்தவ மாபெருங் கூட்டம் ஒன்று இம்மாதம் 16-ந் திகதி சுன்னகம் கிறிஸ்தவ சேவ ஆச்சிரமத்தில் நடைபெறுமென அறிவிக்கப்படுகிறது. உலக திருச்சபை மாநாட்டில் கலந்துகொண்ட பிரதிநிதிகள் சிலரும் இதில் பங்கு பற்றுகிறார்கள்.

## தொண்டர்படை

வவனியா, திங்கள்

திடீசன் கிராமத்தில் சில கனங்களுக்குமுன் நடைபெற்ற களவுகளுக்குப்பின் ஓர் நிரந்தர தொண்டர்படையை நிறுவியுள்ளனர். இதில் சுமார் 50 தொண்டர்கள் சேர்ந்துள்ளார்கள். ஒவ்வொரு நாளும் ஐந்து பேர்கள் வீதம் காவல் புரிந்து வருகின்றனர். இரவு 10 மணிக்குப்பின் போகும் கார் வண்டிகளை மறித்துச் சோதனை செய்துதான் அப்பால் விடுகின்றனர். கார், வண்டிகளை மறிப்பதற்கு ரோட்டுக்கிடையில் குத்திகள் உயர்த்தி விடுகின்றனர். இரவு 10 மணி தொடக்கம் காலை 5 மணி மட்டும் காவல் புரிகின்றனர். தொண்டர்படை உருவாக்கிய தன்பின் ஒருவித களவும் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழ்நாடு பொதுத்தேர்தல்

சென்னை, டிச. 11

தமிழ்நாட்டில் பொதுத் தேர்தல் பிப்ரவரி 17ம் தேதி முதல் 24ம் தேதிவரை நடைபெறுமென அறிவிக்கப்பட்டது.

# "தோட்டப் பாடசாலைகளை சீர்திருத்தவேண்டும்"

## இ. தொ. கா. கம்பளைக் கிளை கோரிக்கை

நாவலப்பிட்டி' திங்கள்

தோட்டத் தொழிலாளர்கள் பிற சமூகத்தினர் முன்னேற்றத்தைப் பார்த்து தாங்களும், முன்னேற்றப்பாதையில் செல்லவேண்டும். கடந்த 20 வருடகால தொழிற் சங்க பணியினல் ஓரளவு நீங்கள் முன்னேற்றமடைந்திருந்தாலும், சமூகதிய பழக்கங்கள், தொழிலாளர்களிடமிருந்து மாற்றமடையவில்லை. தொழிலாளர்களுக்கு இன்று சுதந்திரம் இருப்பதால், முந்திய காலங்களைவிட அதிகமாக கெட்டபழக்கங்களைத்தான் செய்கிருர்கள். இது எனக்கு மிகவும் மனவருத்தத்தைக் கொடுக்கிறது. முன் ஒரு புட்டி மதுவருந்தும் தொழிலாளி இன்று நான்கு புட்டி மதுவருந்தப் பழகிவிட்டார் இதுபொன்ற சமூக மூடபழக்க வழக்கங்களும் குறைவதற்குப் பதில் அதிகரித்துவிட்டது. இந்த வேண்டாத பழக்கங்களை தொழிலாளர்கள் விட்டொழிக்கவேண்டும்" இவ்வாறு கம்பளை கதிரேசன் கோவில் மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கம்பளை மாவட்ட தோட்டக் கமிட்டி உத்தியோகத்தர்கள் பொதுக் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசுகையில மாவட்ட தலைவர் திரு. வே. அண்ணமலை கூறினர். பெருந்திரளான மாதர்களும், குழுமியிருந்த இக்கூட்டத்தில் தொடர்ந்து அவர் கூறியதாவது:-

தொழிலாளர்கள் சுத்தமாகவும், சிக்கனமாகவும் சமூகத்தில் உயர்ந்த நிலைக்கு வரவேண்டும். பிறரை எதிர் பார்த்து வாழாமல் தன்கையே தனக்குதவி என்பதுபோல், சுயமுயற்சியில் முன்னேறவேண்டும். நாகரீகமான இக்காலத்தில் நாம் நாகரீகமாக வாழக்கற்றுக் கொள்ளவேண்டும். இக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நாட்டில் தொடர்ந்து வாழ விரும்பும் தொழிலாளர்கள் அனைவருக்கும் தஸ்தாவேஜுகள் கோராமல் பிரஜாவுரிமை வழங்கி நாடற்ற பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்குமாறு அரசாங்கத்தை வேண்டிக் கொள்கிறோம்.

தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளின் கல்வி அபிவிருத்தி செய்வதற்கு தோட்டப் பாடசாலைகளை அரசாங்கம் எடுதது சீர்திருத்தவேண்டும். தோட்டப் பாடசாலைகளில் கல்வி பயிலும் குழந்தைகளுக்கும் அரசாங்கம் பாலும் பணிசும் பகல் போசனமாகக் கொடுக்கவேண்டும். பாடசாலைகளிலிருந்து இரண்டு மைல் தூரத்திற்குள் வசிக்கும் சிறுவர்கள்தான் பகுதிப் பள்ளியில் சேர்க்க அனுமதிக்கப்படுவார்கள் என்ற கல்வி மந்திரியின் உத்தேச திட்டம் தோட்டத் தொழிலாளர்களின் கல்வி அபிவிருத்திக்கு பாதகமாக இருப்பதால், தோட்டப் பாடசாலைகள் அபிவிருத்தியடையும்வரை மேற்படி திட்டத்தை அமுல் நடத்துவது வருங்கால சிறுவர், சிறுமியர் கல்வி உரிமையைப் பறிப்பது போன்றதாகையால் இத் திட்டத்தைக் கைவிடவேண்டும்.

பாடசாலையில் குழந்தைகளை சேர்க்கும்போது பிரஜாவுரிமை பெற்ற குழந்தைகளுககு முதலிடம் கொடுப்பது என்ற கல்வி மந்திரியின் அறிக்கையும், பிரஜா உரிமை பறிக்கப்பட்டு நாடற்ற மக்களின் குழந்தைகள் வெகுவாகப் பாதிக்கப்படுவதால் நாடற்ற பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணும்வரை இவ்வித பாகுபாடான மனிதாபிமானமற்ற திட்டங்களை அமுல் நடத்த வேண்டாமென்று அரசாங்கத்தைக்கேட்டுக்கொள்ளுகிறோம்,

நாட்டில் மற்றத்தொழிலாளர்களுக்குகொடுத்துவரும் ரூபாய் 17-50 பஞ்சப்படி தோட்டத் தொழிலாளர்களுக்கும் கொடுக்க முதலாளிமார்களுக்கு கட்டளையிடுமாறு பிரதமரைக்கேட்டுக்கொள்ளுகிறும்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு தற்போது கொடுத்துவரும் வயோதிபகாலபென்சன் அவர்களுக்கு வாழ்க்கையைக் கொண்டு நடத்த போதியதாயிராததால், பென்சன் திட்டத்தை மாற்றியமைத்து சட்டமியற்றுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தோட்டத் தொழிலாளர்களின் வேலை நீக்க நோட்டீஸ் ஒரு மாதத்திற்குப்பதில் மூன்று மாதமென்று சட்டமியற்றுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வதென்றும் தோட்டத்தொழிலாளர்களுக்கு மாசி, கருவாடு, புளி விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யுமாறு உணவு மந்திரியைக் கேட்பதென்றும்,

தீபாவளி, பொங்கல், வருடப்பிறப்பு, மேதினம் ஆகிய பண்டிகைத் தினங்களை சம்பளத்துடன் விடுமுறைகளாக்கச் சட்டமியற்ற அரசாங்கத்தை வேண்டிக்கொள்வதென்றும், தோட்டங்கள் தேசியமயமாக்கப்படவேண்டுமென்று சோரும் தீர்மானமும், தோட்டத்தொழிலாளர்களுக்கு நாட்சம்பளமென்பதை மாதச் சம்பளமாக மாற்றியமைக்க அரசாங்கம் சட்டமியற்றுமாறு கேட்பதென்றும், பிரஜா உரிமை பெற்ற தாய், தந்தையர்களுக்கும். குழந்தைகளுக்கும் இலங்கை வம்சாவழியென்று பிறப்பு இடாப்பில் பதியவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்பதென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## அரிசியில் மீண்டும் மோசடி!

கொழும்பு, திங்கள்

'சாமர்ஸ்' தானியக் களஞ்சியில் மீண்டும் ஒரு மோசடி நடத்துள்ளதாக உணவு அமைச்சு உயர் அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

வர்த்தக உணவுக் கப்பல் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. கே. ஆழ்வாப்பிள்ளை களஞ்சியத்துக்குச் சென்றவாரம் திடீர் விஜயம் செய்தபோது, அங்கு வீசப்பட்டுக்கிடந்த கூழான் அரிசியில் நல்ல அரிசியும் பெருந்தொகையாக வீசப்பட்டிருந்ததைக்கண்டார்.

முன்னர் ஒரு தடவை வீசப்பட்ட கழிவுச்சீனியில் நல்லசீனி மூடைகளும் கலந்துகிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

## முல்லைத்தீவு பட்டினசபை தேர்தல் முடிவுகள்

முள்ளியவளை, திங்கள்

சமீபத்தில் நடைபெற்ற முல்லைத்தீவுப் பட்டினசபைத் தேர்தல் முடிவுகள் வருமாறு:-

திரு. வே. செல்வநாயகம், திரு. அ. பிலிப்பையா, திரு. வெ. ஜோசப், திரு. ஏ. எம். கந்தையா, திரு. சூ. வஸ்தியாம்பிள்ளை.

கடந்த சபையில் அங்கத்துவம் வகித்தவர் எவரும் இம்முறை தெரிவுசெய்யப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடததக்கது.

## பஞ்சாயத்து ஆடசி முறை

புதுடில்லி, டிச. 11

"இன்னும் ஒரு வருடத்துக்குள் பாரதத்தில் பஞ்சாயத்து ஆட்சி முறை முற்றிலும் அமுலுக்கு வந்துவிடும்" என்று திரு. எஸ். கே. டே அறிவித்தார். இப்பொழுது 60 சத விகிதமான இடங்களில் பஞ்சாயத்து ஆட்சி முறை அமுலுக்கு வந்துள்ளதென்று அவர் சொன்னர்.

# கவிஞர்களைப் போற்றவேண்டும்

## வேலணையில் வெளியீட்டுவிழா

ஊர்காவற்றுறை, திங்கள்

"கற்பனைத் திறனும் சொல் வளமும் உடையதாய் உணர்ச்சியுடன் சிந்தனைக்கு விருந்தளிக்கும் நூல்களே உண்மையான கவிதை நூல்களாகும். அவற்றுள் "கனவுக் கன்னி" எனும் இப்புதிய கவிதை நூலும் ஒன்ருகும்.

இவ்வாறு இளங்கவிஞர் -சரவணையூர் தில்லைச் சிவன் இயற்றிய 'கனவுக்கன்னி' கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழாவில் உரை நிகழ்த்திய வட்டுக்கோட்டை எம். பி. திரு; ஏ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

பண்டிதர் ச. குமரேசையா தலைமையில் வேலணை (செ. சு) வடக்கு ஆத்திசூடி வித்தியாசாலையில் இவ்விழா நடைபெற்றது. கழகத் தலைவர் திரு. மாணிக்க வாசகர் வரவேற்புரை நிகழ்த்திஞர்.

திரு. கனக செந்தில்நாதன் பேசுகையில் கவிதை நூல்களை தமிழர்கள் நன்கு ஆதரிக்க வேண்டும் என்றும் கவிஞர்களைப் போற்றவேண்டும் என்றும் வேண்டிக் கொண்டார்.

மேலும் அவர் பேசுகையில் ஈழத்துக் கவிஞர்கள் பின்தங்கியவர்கள் அல்லர் எனவும் சோமசுந்தரப் புலவர் ஈழநாட்டுக்குப் பெருமை தேடித் தந்தவர்கள் எனவும் குறிப்பிட்டு இவ்வகையில் தில்லைச் சிவன் கவிதை பாராட்டுதற்குரியன எனவும் குறிப்பிட்டார்.

நூல் ஆசிரியர் தில்லைச் சிவனின் நன்றியுரையுடன் விழா நிறைவேறியது.

# இரண்டுநிற பங்கீட்டரிசி புத்தகங்கள் வழங்கப்படும்

## இலங்கையருக்கு மஞ்சள்; இலங்கையரல்லாதாருக்கு காவி

கொழும்பு, திங்கள்

இரண்டுவிதமான பங்கீட்டரிசிப்புத்தகங்கள் அடுத்தவருடத்திலிருந்து வழங்கப்படவிருக்கின்றன. இலங்கையருக்கென ஒரு புத்தகமும் இலங்கையர் அல்லாதவர்களுக்கு மற்ருெரு புத்தகமும் வழங்கப்படும்.

இலங்கையருக்கு மஞ்சள் வர்ணப் புத்தகமும் இலங்கையரல்லாதோருக்கு காவி வர்ண பங்கீட்டரிசிப் புத்தகமும் வழங்குவதென உணவு வர்த்தக அமைச்சு தீர்மானித்துள்ளது.

பங்கீட்டரிசிப் புத்தகங்களை சிங்களத்திலும் தமிழிலும் மட்டும் அச்சடிப்பதென்றும் அமைச்சு தீர்மானித்துள்ளது.

## கூலிப்பட்டாளமே சண்டை செய்கிறது

### ஐ. நா. தளபதி கருத்து

நியுயோர்க், டிச 11

கடாங்காவில் அந்நிய கூலிப்பட்டாளத்தினரே சண்டையை நடத்துவதாக ஐ. நா. படைத் தளபதி ஜெனரல் மக்கோவன் தெரிவித்தார்.

ஷோம்பேக்கு அவரது துருப்புக்கள் மீது அதிகாரம் செலுத்தமுடியாமலுள்ளதாகவும் ஷோம்பேயின் விருப்பத்துக்கு மாருகவே கட்டாங்காவில் சண்டை நடைபெற்று வருகிறதென்றும் ஜெனரல் மக்கோவன் தெரிவித்தார்.

ஐ. நா. வுடன் சமரசம் பேசுவதற்கு ஷோம்பே ரகசியமாக முயற்சி செய்துவருவதாகவும் ஜெனரல் கூறினர்.

## கதிர்காம மடங்களை அகற்ற எதிர்ப்பு

ஊர்காவற்றுறை, திங்கள்

சாதிசமய வேறுபாடின்றி வழிபடும் அடியார்களின் பிரார்த்தனைத் தலமாக அமைந்துள்ள கதிர்காமம் புதிய நகர் அமைப்புக்கமிட்டி செய்திருக்கும் முடிபுகளை மாற்றியமைக்குமாறும் அரசினரை வேண்டிக்கொள்ளும் தீர்மானம் அண்மையில் நடைபெற்ற நாரந்தனைக் கிராமசபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கிராமசபைத் தலைவர் திரு. சு. கதிரித்தம்பி பிரதம மந்திரிக்கும், வீடமைப்பு மந்திரிக்கும் தீர்மானம் பற்றிய மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

## பக்ரா மின்சார உற்பத்தி ஆரம்பம்

நங்கல், டிச. 11

பஞ்சாபில் பக்ரா அணையின் இடதுகரை மின்சார உற்பத்தி நிலையத்தை பிரதமர் ஸ்ரீ நேரு நேற்று திறந்து வைத்தார், ஐந்து செனரேட்டர்களைக் கொண்ட இந்தநிலையம் நான்கு லட்சத்து ஐம்பதினயிரம் கிலோவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும்.

ஆசியாவிலேயே மிகப் பெரியதான இந்த மின்சார உற்பத்தி நிலையத்தை ஸ்ரீ நேரு திறந்துவைத்துப் பேசுகையில் பாரதத்தின் முன்னேற்றத்துக்கு இது ஒரு அடையாளம் என்ருர். பாரதம் விடுதலையடைந்ததும் ஆரம்பிக்கப்பட்ட பக்ரா திட்டம் புதிய பாரதத்தின் சின்னம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## அளம்பில் கிராமத்தின் குறைபாடு

முள்ளியவளை, திங்கள்

அளம்பில் கிராமமக்கள் வவனியா எம். பி திரு, தா. சிவசிதம்பரத்துக்கு அளித்த வரவேற்பின்போது அக்கிராமத்தின் குறைபாடுகளைத் தெரிவித்தனர். அங்கு ஆஸ்பத்திரி வசதி கிடையாதெனவும் வாரம் ஒரு முறையேனும் டாக்டர் ஒருவர் அங்கு வந்து சிகிச்சை செய்வதற்கான ஒழுங்குகளைச் செய்து தரவேண்டுமெனவும் அவர்கள் எம். பி. யைக் கேட்டுக்கொண்டனர்:

தமக்கும் தமது பாரியாருக்கும் அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றிதெரிவித்துப் பேசுகையில் அவர்களின் குறைபாடுகளைத் தீர்ப்பதற்குத் தாம் உரிய அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு ஏற்ற நடவடிக்கைகளைச் செய்வதாக திரு. சிவசிதம்பரம் உறுதியளித்தார்.

திரு. எம். ஏ. பர்ணண்டோ, திரு. செல்லத்துரை ஆகியோருமம பேசினர். இக்கூட்டம் கிராம முன்னேற்றச்சங்க மண்டபத்தில நடைபெற்றது.

## நெல்லியடியில் தொண்டர் படை

உடுப்பிட்டி, திங்கள்

பெருகிவரும் களவுகளைத் தடுக்கும் நோக்கமாக கரவெட்டி வடக்கு கிராமத் தலைமைக்காரர் திரு. கே. சுப்பிரமணியம் ஒரு தொண்டர்படையை நிறுவியுள்ளார். இதுவரை இத தொண்டர்படையில் 20 இளைஞர் சேர்ந்துள்ளனர்.


# குனேகா செண்டுகள்

வாழ்க்கை மலர்ச்சியுற உலகப் புகழ்பெற்ற

**குனேகா** மருக்கொழுந்து உபயோகித்து ஆனந்தமடையுங்கள்

தயாரிப்பவர்கள்:

**குனேகா** அடையார், மதராஸ் 20.

இலங்கை சோல் ஏஜண்டுகள்:

# ஜெகஜோதி அன் கோ,

குருதெனியா.

கொழும்பு ஸ்டாக்கிஸ்ட்:

## செல்வாஸ் (SELVAS)

(பிரபல ஜவுளித் தினிசு விற்பனையாளர்கள்)

31, செட்டியார் தெரு, கொழும்பு.

யாழ்ப்பாண விற்பனையாளர்

தமிழ் பண்ணை கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

# மன்னார்பட்டின சபை தேர்தல் முடிவுகள்

மன்னார், திங்கள்

நேற்று நடைபெற்ற மன்னார் பட்டின சபை தேர்தலில் 7 வட்டாரங்களிலும் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்:-

1-ம் வட்டாரம் திரு. ஏ. எம். பி. வரப்பிரகாசம் 269, திரு. பி. பிரான்சிஸ்பிள்ளை 259.

2-ம் வட்டாரம்: திரு. யூ. அப்துல் சலாம் 176, திரு. பி. மொகமட் காசிம் 145, திரு. ஏ. அப்துல் மஜீட் 62.

3-ம் வட்டாரம்: திரு. எம். எஸ். அப்துல் றகுமான் 246, திரு. அப்துல்கபூர் மொகமட் 189.

4-ம் வட்டாரம்: திரு. கே. வைத்திலிங்கம் 210, திரு. கே. மாணிக்கராசா 149.

5-ம் வட்டாரம்: திரு. பெனுன்டோ அன்ரன் இம்மனுவேல் 310, திரு. ஆர். எஸ். லாசரஸ் 79.

6-ம் வட்டாரம்: திரு. சபா. ஈ. மாசிலாமணி 162, செல்வன் ஏ. மரியதாஸ் 122, திரு. சந்தியாப்பிள்ளை யோசப் 59.

7-ம் வட்டாரம்: திரு. எஸ். மருசலீன் 354, திரு. எஸ். அல்பேட் 271.

## வடமராட்சி பஸ்பிரயாணிகள் சங்கம்

உடுப்பிட்டி, சனி

இ. போ. ச. நிர்வாகக் குறைபாடுகளால் பஸ் பிரயாணிகளுக்கு ஏற்படும் வசதியீனங்களைக் காலத்துக்குக் காலம் சுட்டிக்காட்டவும், நிர்வாகத்தைத் திறம்பட நடத்தும் விஷயத்தில் இ. போ. ச. வுடன் ஒத்துழைக்கவும், தனிப்பட்டவான் முதலாளிகளினால் இ. போ. சா. வுக்கு ஏற்படும் நட்டத்தைக் குறைக்கும் நோக்கமாகக் கொண்டு வடமராட்சிப் பகுதியில் சில பிரமுகர்கள் பஸ் பிரயாணிகள் சங்கம் ஒன்றை அமைக்க முன்வந்துள்ளதாகத் தெரிகிறது. இலங்கையில் வேறு இடங்களில் இவ்வித சங்கங்கள் பிரயாணிகளுக்கு அரும்பணி செய்துவருவது குறிப்பிடத்தக்கது.

## மீன்பிடியாளர் இடம்மாறும் வழக்கம்
### மந்திரி சில்வா உத்தரவு

கொழும்பு, திங்கள்

மீன்பிடித் தொழிலாளர்கள் காலத்துக்குக் காலம் இடம் மாறித் திரிவது பற்றி உடனடியாக அறிக்கையொன்று சமர்ப்பிக்குமாறு காணி விவசாய நீர்ப்பாசன அமைச்சர் திரு. சி. பி. டி சில்வா மீன்பிடி இலாகா டைரக்டரைக் கேட்டுள்ளார்.

மீன் பிடித் தொழிலாளர்கள் இடத்துக்கிடம் மாறிச் செல்வதால் நிரந்தரமாக ஒரே இடத்தில் தங்கிவரும் மீன்பிடித் தொழிலாளர்களின் உரிமைகள் பறிபோகின்றன என்று மீனபிடிப் பகுதி உப கமிட்டி தெரிவித்ததன் பேரிலேயே காணி விவசாயமந்திரி மேற்படி உத்தரவை விடுத்துள்ளார். மீன்பிடித் தொழிலாளர்கள் இடம்விட்டு இடம் மாறும் வழக்கம் கைவிடப்பட வேண்டும் என மூதூர் எம். பி. யும் மீன்பிடி உபகமிட்டியின் ஒரு அங்கத்தவருமான ஜனாப் ஏ. எல். எம். மஜீத் அரசாங்கத்திடம் வலியுறுத்திக் கூறியுள்ளார். இவ்வழக்கத்தை உடனடியாக கைவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என அவர் அரசாங்கத்தைக் கேட்டுள்ளார்.

திருக்கோணமலைப் பகுதியில் இடம் பெயரும் மீன்பிடித் தொழிலாளிகள் சம்பந்தமாக நிகழ்ந்த சம்பவமொன்றையும் அரசாங்கத்துக்கு அவர் எடுத்துக்கூறினார்.

## 40 பதவிகளுக்கு 2000 பேர் மனு

கொழும்பு, திங்கள்

40 உணவு விலைக்கட்டுப்பாட்டு இன்ஸ்பெக்டர் பதவிகளுக்கு இரண்டு மாதங்களுக்கு முன் மனுச் செய்த இரண்டாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் இப்பொழுது உணவு இலாகா கமிஷனர் காரியாலய அதிகாரிகளின் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

ஆறு அதிகாரிகளைக்கொண்ட ஒரு குழு இவர்களைப் பரீட்சை செய்துவருகிறது.

# மாத்தளை பாக்கிய வித்தியாசாலை அதிபர் நியமனம்
### மந்திரிக்கு மகஜர்

மாத்தளை, ஞாயிறு

"மாத்தளை பாக்கிய வித்தியாசாலை காலஞ்சென்ற திரு. எஸ். எஸ். கந்தசாமியால் சைவமும், தமிழும் வளரவேண்டும் என்ற எண்ணத்துடன் ஸ்தாபனமானது. அத்துடன் இவ் வித்தியாசாலையில் பௌத்த, முஸ்லிம் மகளிரும் கற்றனர். கற்றும் வருகின்றனர். இதை அரசினர் ஏற்றுக்கொள்ள ஆவனபுரியும் தருணத்தில் திடீரென வித்தியாசாலையிலுள்ள அதிபரை மாற்றி சைவமதத்தைச் சாராத ஒரு பெண் அதிபரை நியமிக்க எத்தனங்கள் நடைபெறுவதாக அறிகிறோம். இப்போதுள்ள அதிபரை மாற்றுவதில் எவ்வித எதிர்ப்பும் நாம் தெரிவிக்கவில்லை. ஆனால் புதிய அதிபர் நியமனத்தில் இடம் பெறுபவர் சைவமதத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்". என்று கூறும் மகஜர் ஒன்று கல்வி மந்திரிக்கும், கண்டி—உதவி வித்தியாதிகாரிக்கும், திரு. எஸ். தொண்டமானுக்கும், மாத்தளை சைவ மகா சபையினர் அனுப்பியுள்ளனர்.

## மாநகரசபையை கலைக்கக்கோரிபிரேரணை

காலி, திங்கள்

தண்ணீர், மின்சாரம், சுகாதார வசதி ஆகிய அடிப்படை வசதிகளை வரியிறுப்பாளர்களுக்கு அளிக்க காலிமாநகரசபை தவறிவிட்டதால் காலி மாநகரசபையை உடன்டியாக கலைக்கவேண்டுமெனக் கோரி மட்வல முல்லவட்டார அங்கத்தவர் திரு டபிள்யூ டி. ஒபயசேகரா ஒரு பிரேரணைக்கு முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

அடுத்த திங்கட்கிழமை நடைபெறவிருக்கும் சபைக் கூட்டத்தில் இப்பிரேரணை விவாதத்துக் கெடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது.


## நான் விரும்புவது
# நெஸ்டோமோல்ட்

அது எனக்கு எவ்வளவோ நன்மையளிக்கின்றது...




குழந்தைகள், வாலிபர், குடும்பப் பெண்கள் ஆகிய எல்லோருமே விரும்பி அருந்தும்இந்த நெஸ்டோமோல்ட் அபார நன்மை அளிக்க வல்லது. சூடானாலென்ன, ஐஸ் போன்ற குளிர்மையானாலென்ன, இழந்த சக்தியை மீட்டுத் தரவும் ஊக்கமூட்டவும் சுவை நிரம்பிய நெஸ்டோமோல்டுக்கு நிகர் எதுவுமே கிடையாது. நெஸ்டோமோல்டில் ஒரு ஆச்சர்யமென்னவென்றால், உங்களுக்கு நன்மையானவை யாவும் அதில் அடங்கியிருப்பதுதான். இத்தனைக்கும் அதன் சுவை ஒரு தனி ரகம்.

நெஸ்டோமோல்ட் ஒரு உன்னத பால் ஆகாரம். இது மோல்ட்டட் பார்லி மற்றும் கோதுமை மாவுடன் முழுப் பாற்கட்டிகளை ஒன்று சேர்த்து கவனமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு உற்பத்தியாகும். இதில் விட்டமின் A, B2, மற்றும் E அதோடு கல்ஸியம், மக்னீஸியம், ஆகியவற்றின் பெறுமதியான ஓர்கனிக் பொஸ்பேட்டுகள்மற்றும் ஒவ்வொரு அவுன்ஸ் பவுடருக்கும் 137 மேலதிக விட்டமின் B சத்துக்கள் உள்ளன.

உற்பத்தி செய்து உத்தரவாதமளிப்பவர்கள்

**நெஸில்ஸ்**

இலவச சாம்பிள்

இலவச நெஸ்டோமோல்ட் சாம்பிளைப் பெற உங்களது பெயர் விலாசத்தையும் அதோடு தபால் கட்டணமாக 25 சதத்திற்கு முத்திரைகளும் அனுப்பி வைக்கவும்.

நெஸில்ஸ் புரொடக்ஸ் (சிலோன்) லிமிட்டெட்
த. பெ. 189,
கொழும்பு.

# நெஸ்டோமோல்ட்

விட்டமின் B அடங்கியது.

# ஈச்மன் குற்றவாளியெனத் தீர்ப்பு
## வெள்ளிக்கிழமை தண்டனை விதிக்கப்படும்

டெல்அவிவ், டிச. 11

60 லட்சம் யூதர்களை படுகொலை செய்ததாய்க் குற்றஞ் சாட்டப்பட்ட அடோல்ப் ஈச்மனை 3 நீதிபதிகளடங்கிய நீதிமன்றம் இன்று குற்றவாளி எனத் தீர்ப்பளித்தது. வருகிற வெள்ளிக்கிழமையன்று தண்டனை வழங்கப்படும்.

குற்றவாளி என்ற நீதிபதிகளின் தீர்ப்பை ஈச்மன் எவ்விதச் சலனமுமின்றிக் கேட்டார். கண்ணுடி அணிந்தவெளிறிய முகத்துடன் அடிக்கடி உமிழ் நீரை விழுங்கியபடியே நீதிபதிகளை அவர் பார்த்துக் கொண்டிருந்தார்.

“நீர் குற்றஞ்சாட்டப்பட்டதைவிடக் கடுமையான குற்றம் எதுவுமே கிடையாது” என தலைமை நீதிபதி அவரிடம் கூறினர்.

## அனுமதி வழங்கப்பட்டது

பதுளை, திங்கள்

ஊவா பகுதி துணைக் கல்வி ஆணையாளரின் தலைமையில் நடைபெற்ற வட்டாரப் பாடசாலை தலைமை ஆசிரியர்கள் மகாநாட்டின் முடிவின்படி, தோட்டப் பிள்ளைகளுக்கு அனுமதி கிடைக்காது போன நிலைமையை ஆட்சேபித்து ஊவாமாகாணத் தமிழாசிரியர் சங்கம் ஊவா. மாகாணத் துணைக் கல்வி ஆணையாளருக்கு அனுப்பிய தந்தியை முன்னிட்டு தோட்டப்பாடசாலை மாணவர்கட்கு அனுமதி வழங்குமாறு கல்வி ஆணையாளர் உத்தரவு பிறப்பித்துள்ளார் எனத் தெரியவருகிறது.

## பதவி இழந்தார்

தெல்லிப்பழை, திங்கள்

பண்டத்தரிப்பு கிராமச்சங்கத்தின் மூன்ரும் வட்டார உறுப்பினர் திரு. பொன்னையா தியாகராஜா தொடர்ச்சியாக மூன்று சபைக் கூட்டங்களுக்குச் செல்லாமையால் அங்கத்துவ பதவியை இழந்துவிட்டதாக உள்ளூராட்சி உதவி அதிகாரி திரு. ஏ. ஏ. யோாசப் அறிவித்துள்ளார்.

## தியேட்டர் செய்திகள்

யாழ்ப்பாணம் வெலிங்டன் நாகேஸ்வரராவ் நடித்த **எங்கள் செல்வி**

•

யாழ்ப்பாணம் மனோகரா சிவாஜி கணேசன் நடித்த வணங்காமுடி,

•

சாவகச்சேரி **தேவேந்திரா** ஜெமினி கணேசன் நடித்த **களத்தூர் கண்ணமமா**


**விரைவில் எதிர்பாருங்கள்!**
**ராஜமணி பிக்சர்ஸ்**
**பாசமலர்**

**3-வது வாரம்**
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி)
நாகேஸ்வர ராவ், அஞ்சலிதேவி, பாலையா நடித்த




**மனோஹரா** (யாழ்ப்பாணம்) மாலை 6-30 இரவு 9-30
சிவாஜி கணேசன் சாவித்திரி நடித்த
**வணங்காமுடி**


## வானொலி நிகழ்ச்சிகள்
### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**செவ்வாய் 12-12-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரை இசை, 8-00 வயலின், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 திரை இசை, 6-15 கிராம சஞ்சிகை, 6-45 கிளாரினட்.

இரவு7·30நேயர்விருப்பம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 இசைச் சித்திரம், 10-00 நாகஸ்வரம்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15.)

காலை 6-45 மங்கள் இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள். 7-30 எம். கே. கமலகுமாரி—பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு. 1-00 கதம்பம், 1-50 வாத்திய இசை, 2-10 உயர் தரப்பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்) 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 செல்வம் தரும் திட்டங்கள்—சித்திரம், 7-45 அயிலூர் கிருஷ்ணன்—பாட்டு, 9-15 ‘விளையாட்டும் வினையும்’—நாடகம்.

## நாடுமுழுதும்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### அரசாங்கம் முயற்சி

வேலை நிறுத்தத்தை நிறுத்த அரசாங்கம் தன்னுலான் முழு முயற்சியையும் எடுத்து வருவதாகத் தெரிகிறது.

### ஆயிரக்கணக்கான பிரயாணிகள்

ஹட்டன், கண்டி, தலவாக் கொல்லை, கொத்மலி, ஹப்புகஸதலாவை ஆகிய இடங்களில் மேற்படி வேலை நிறுத்தத்தினல் ஆயிரக்கணக்கான பிரயாணிகள் தாம் செல்ல வேண்டிய இடங்களுக்குச் செல்ல முடியாது போயிற்று. சம்பளம் பெற்றுக்கொண்டு நகரத்துக்கு வந்த தோட்டத் தொழிலாளர் பலர் வாடகைக் காரகளில் தமது இடங்களுக்குச் செல்ல வேண்டியிருந்தது. கார்காரர்கள் தமது கட்டணங்களை உயர்த்தியதால் நன்ருகப் பணம் சேர்க்க முடிந்தது.

## வானவெளிப் பயணத்துக்கு இந்தியர்

ஹைதரபாத், டிச. 10

ரஷ்யா அடுத்து என்ன அதிசயமான செயலை ஆற்ற இருக்கிறது என்று வானவெளி மனிதன் மேஜர் காகரினை இங்கு கேட்டதற்கு “பொறுத்திருந்து பாருங்கள்” என்று அவர் பதிலளித்தார்.

எதிர்கால வானவெளி பயணத்தின்போது ஒரு இந்தியனைத் தங்களுடன் அழைத்துச் செல்வீர்களா? என்று ஒரு நிருபர் கேட்டார்.

இந்தியாவில் ஏற்படும் விஞ்ஞான முன்னேற்றத்தையும் தங்கள் இரு நாடுகளுக்கும் இடையே உள்ள உறவையும் அது பொறுத்ததாகும் என்று காகரின் பதிலளித்தார்.

# “சேமிப்பு இயக்கத்தை வளர்க்க வாழ்க்கைச் செலவைக் குறைக்கவேண்டும்”
## முதலியார் தியாகராசா அறிவுரை

யாழ்ப்பாணம், திங்கள்

சேமிப்பு லட்சியத் தொகையான 6,000,000 ரூபாயில் யாழ்ப்பாணம் 4,332.158 ரூபாவை இவ்வருடம் செப்டம்பர் மாத இறுதியில் சேகரித்துள்ளது என இராஜவாச முதலியார் வி. தியாகராஜா யாழ்ப்பாணம கச்சேரியில் நடைபெற்ற தேசிய சேமிப்பு கமிட்டிக் கூட்டத்தில் தெரிவித்தார்.

முதலியார் தியாகராஜா தொடர்ந்து பேசியதாவது:

வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கு வழி வகுத்தாலன்றி சேமிப்பு இயக்கத்தை வளர்த்துவிடமுடியாது. எதிர்காலத்தில் நிலைமைகள் சீராகி குறிப்பிட்ட தொகைக்கு மேலாக யாழ்ப்பாண மக்களின் சேமிப்பு அதிகரிக்குமென நான் நம்புகிறேன்.

டிஸ்திறிக் மேற்பார்வையாளர் திரு. பி குமாரசிங்கம் தமது அறிக்கையில் குறிப்பிட்டதாவது:

யாழ்ப்பாணப் பகுதியில் எல்லாமாக 897 சேமிப்பு குழுக்கள் உள்ளன.

1961-62ம் ஆண்டுகளுக்கு 5,000,000 ரூபா லட்சியத் தொகையாக சேமிப்பதென ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

கமிஷனர் திரு. வி. சச்சிதானந்தன் பேசுகையில் விவசாயிகளிடையில் சேமிப்பு நிலையங்கள் ஆரம்பிக்கப்படாதது தமக்கு வருத்தம் தருவதாக இருப்பதாகக் கூறினர்.

தலைமை தாங்கிய யாழ்ப்பாண மாவட்ட அரசாங்கஅதிபர் லெப்டினண்ட் கேர்னல் ஏ. ஆர். உடுகம சேமிப்பின் அவசியம்பற்றிக் குறிப்பிட்டு யாழ்ப்பாணம் கைத்தொழில் முன்னேற்றமடைவதற்கு மக்கள் தாமாகவே சேமிப்பு இயக்கத்துக்கு ஆதரவுதர வேண்டுமெனக் கூறினர்.

# “உள்நாட்டு கைத்தொழிலுக்கு ஆதரவளியுங்கள்”
— மந்திரி

கொழும்பு, திங்கள்

“தேயிலை, ரப்பர். தேங்காய் ஆகியவற்றை மட்டும் ஏற்றுமதி செய்வதின் மூலம் எங்களது பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்துவிட முடியாது. முதலில் ஒரு நாடு கைத்தொழிலில் முன்னேற்றமடையவேண்டும்” என்று ரத்மலானையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கைத்தொழில் வீடமைப்பு கலாச்சார மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா பேசுகையில் கூறினர்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது: “உள்நாட்டு கைத்தொழில் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்காமல் தனது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு விவசாய வருவாயை மட்டும் ஒரு நாடு நம்பியிருக்கக்கூடாது. ஜனத்தொகை அதிகரித்துக் கொண்டுபோகும் இச்சமயத்தில், இந்நாட்டுக்கு உள்நாட்டு கைத்தொழில் உற்பத்திதான் அதிமுக்கியமாகத் தேவைப்படுகிறது. பாவனையாளர்களின் தேவைகளை உற்பத்தியாளர்கள் பூர்த்தி செய்வதுடன் மட்டுமன்றி அவைகளைக் கிடைக்கக்கூடிய வகையிலும் உதவி செய்ய வேண்டும்.

“இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் இந்த நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களைவிட உயர்ந்தது என்று மக்கள் கருதுகின்றனர். இந்த எண்ணம் மாற வேண்டும்.”

## பெண்ணை கடத்தியதாக சாதுமீது வழக்கு

பெங்களூர், டிச. 10

தாயாரின் பாதுகாப்பிலிருந்த இளம் பெண்ணைக் கடத்திச் சென்றதாக தஞ்சையைச் சேர்ந்த வாலிபசாது ஒருவர் மீது பெங்களூர் பொலிசார் இங்கு வழக்குத் தொடர்ந்திருக்கின்றனர்.

இந்தச் சாதுவின் பெயர் மாணிக்கசிவன். வயது 34. தஞ்சை மாவட்டம் நீடாமங்கலத்தைச் சேர்ந்தவர் எனத் தெரிகிறது.

இளம் பெண்ணைக் கடத்திச் சென்றது சம்பந்தமாகப் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து பொலிசார் சில தினங்களுக்குமுன் இவரைக் கைது செய்தனர். பின் ஜாமினில் விடுதலை செய்யப்பட்டார். உதவி முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் கோர்ட்டில் பொலிசார் சாதுமீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர். குற்றப்பத்திரிகையில் கூறப்பட்டிருப்பதாவது:

தாயாரின் பாதுகாப்பில் இருந்த இளம் பெண் குமாரி சுந்தரி திருபுவனத்தை கடந்த அக்டோபர் 21-ந் திகதி சாது கடத்திச் சென்ருர். சுந்தரிக்கு வயது 17. சுந்தரியின் தாயார் டாக்டர் ஏ. சி. பானி பாதுகாப்பில் வசித்து வருகிருர்.

பெங்களூரில் உள்ள செயிண்ட் மார்த்தா ஆஸ்பத்திரியில் சுந்தரி ஒரு குழந்தைக்குத் தாயானுர். ஆஸ்பத்திரி ரிஜிஸ்தரில் சுந்தரியின் கணவராக சாதுவின் பெயர் பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்று குற்றப்பத்திரிகையில் கூறப்பட்டிருக்கிறது.

பிராஸிக்யூஷன் தரப்பில் 15 சாட்சிகள் உள்ளனர். நகரிலுள்ள பிரபல பெண்கள் கல்லூரி முதல்வர் மற்றும் இரு பிரபல டாக்டர்கள் ஆகியோர் சாட்சிகள் பெயர்ப்பட்டியலில் இருப்பது குறிப்பிடத்தக்கது. வழக்கு விசாரணை இம்மாதம் 15-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## கென்யாட்டாவைக் கொல்ல மும்முறை சபதம்

நைரோபி, டிச. 10

கென்யா தலைவர் கென்யாட்டாவைக் கொலை செய்ய சபதம் எடுத்துக்கொள்ளும் சடங்குகள் மும்முறை நடந்ததாக கென்யா அரசாங்கம் கண்டுபிடித்துள்ளது. கென்யா பாதுகாப்பு உள்துறை மந்திரி டோஸ்னிவான் இத்தகவலை சட்டசபையில் தெரிவித்தார்.

## திருமணம் செய்யத் தடை

புதுடில்லி, டிச 10,

எண்ணெய் தொழில் நுட்பத்தில் பயிற்சி பெறுவதற்கு வெளிநாடுகளுக்குச் செல்லும் இந்திய மாணவர்கள் தாங்கள் பயிற்சி பெறும் நாடுகளில் திருமணம் செய்துகொள்ளக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை ராஜ்ய சபையில் எண்ணெய் வள மந்திரி திரு. கே. டி. மாளவியா தெரிவித்தார்.

படிப்பு நிமித்தம் சென்றவர்கள் வாழ்க்கை சம்பந்தப்பட்ட விஷயங்களில் காலத்தைச் செலவிடுவது பொருத்தமல்ல: முறையுமல்ல என்று கருதப்பட்டதால் இத்தடை விதிக்கப்பட்டதாக மந்திரி விளக்கினர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 12-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.